Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542






# ரமணோதயம்

ஜனவரி 2012
காலாண்டு

ஜயந்தி இதழ்
விலை ரூ. 20/

# ஓர் அன்பு வேண்டுகோள்

ரமணோதயம் வாசக அன்பர்களே!

ரமணோதயம் கடந்த பத்து ஆண்டுகளாக பொருளாதார தளர்வுகளுக்கிடையிலும் தனது சேவையில் எவ்வித சோர்வுமின்றி ரமண அன்பர்களுக்குச் சேவை செய்வதையே இலட்சியமாகக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருவது சொல்லித் தெரிவதில்லை. தனது பதினோறாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த நல்வேளையில் இதன் நிர்வாகம் ரமண அன்பர்கள் முன் வைக்க வேண்டிய அன்பு வேண்டுகோள் ஒன்றுள்ளது. இதுகாறும் இதனைப் பேணி வளர்த்த பெருமையனைத்தும் ரமணோதய வாசகர்களையே சாரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இனியும் ரமணோதயம் தொடர்ந்து பொருளாதாரத் தளர்வின்றி தனது பணியைத் தொடர வேண்டுமெனில் அதற்கான வைப்பு நிதி மிகவும் வலுவான நிலையில் வைக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. தொடர்ந்து எவ்விதப் பொருளாதாரத் தடங்கலுமில்லாமல் இதன் பணி தொடர குறைந்தபட்சம் ரூபாய் பத்து இலட்சம் வைப்பு நிதி உருவாக்கப் பட வேண்டும். இதற்கு பகவானைப் பிரார்த்திப்பதுடன் உங்களைத்தான் இப்பொருளுதவியை அளிக்க வேண்டும் என வேண்டுகிறோம். இந்த வைப்புத் தொகையின் கணக்கில் பொருளுதவி செய்ய தாங்கள் ஆயிரம் மற்றும் அதன் மடங்குகளாக பணமாகவோ அல்லது காசோலையாகவோ "Ramanodhayam" என்னும் கணக்கிற்கு செலுத்த வேண்டுகிறோம். இத்தொகை அளிப்போருக்கு S80G பிரிவின் கீழ் வருமான வரி விலக்கு உண்டு.

என்றும் பகவான் பணியில்,
ரமண கேந்திரா டிரஸ்ட்
சென்னை







உதயம் 11 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 2

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

**ஜயந்தி இதழ்**

**ஜனவரி 2012**

**ஆசிரியர்:** Dr. S. ராம் மோஹன்

**இணை ஆசிரியர்:** தியாகராஜன்

**ஆலோசகர்கள்:**

ஏ.வி. சுப்ரமணியன், ஜா. ஜயராமன், சந்திரமௌலி

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

**ஆண்டுச் சந்தா:** ரூ. 75 **தனி பிரதி:** ரூ. 20

காசோலை/மணியார்டர் 'ரமண கேந்திரா டிரஸ்ட்' என்ற பெயரில் எடுத்து 20, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்பு அணுகவும்:

குமார் ராஜா: 9444261296

மின்னஞ்சல்: arunamramanam@gmail.com

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:

குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்

20, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமணகேந்திரா டிரஸ்ட், சென்னை 4

தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஜயந்தி இதழ், ஜனவரி 2012


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | அமைதிக்கு வழி | சிவானந்தர் | 21 |
| 3 | சிவானந்த லஹரி | கௌதமன் | 28 |
| 4 | இனிவரும் திருநாட்கள் | | 33 |
| 4 | சிலந்தியாய் வரும் சிவனருள் | Dr. S. ராமகிருஷ்ணன் | 34 |
| 5 | நான் யார் தெரியுமா? | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 41 |
| 6 | ரிபு கீதை | தியாகராஜன் | 48 |
| 7 | சுவர்மறை சோலை | ஜா. ஜயராமன் | 54 |
| 8 | சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள் | | 57 |
| 9 | நாம் எதையும் முழுமையாகப் பார்ப்பதில்லை | | 62 |
| 10 | தேர்கலை எல்லாம் தேறினும் சிந்தை தெளியாது... | | 67 |
| 11 | புனர்வசு வண்ணம் | | 68 |
| 11 | ரமணானுபவம் | நரசிம்மய்யர் | 72 |
| 12 | செய்திகள் | | 75 |

## ஆசிரியர் உரை

# மெல்ல மெல்ல உதிக்கும் மெய்மை ஆனந்தம்!

ஆன்ம சாட்சாத்காரம் பெறுவதற்கு ஆன்மீக நாட்டம் உண்முகப் பயணப் பயிற்சி மட்டுமே போதாது, இறையருளும் தேவை என்பதை முன்பு கண்டோம். நமக்கு வழிகாட்ட இறங்கி வந்த குருநாதன் பல்வேறு சமயங்களில் நமக்கு வெளிப்படையாக மட்டுமின்றி குறிப்பாகவும் ஞான உபதேசம் செய்கிறான். நமது பகவானது உபதேசமும் பல சமயங்களில் இங்ஙனம் குறிப்பின் மூலம் உணர்த்தப் படுகிறது. கேட்பவர் பக்குவத்தைப் பொறுத்து சீடனின் உள்வாங்கி அப்யசிக்கும் தன்மை வேறுபடுகிறது. உதாரணமாக, குஞ்சு சுவாமிகளின் வாழ்வு நிகழ்ச்சியைக் காணலாம். கேரளத்தில் இருந்து ஆன்மீக தாகம் உந்தப் பெற்று வந்த இளைஞர் குஞ்சு சுவாமி. பகவானின் நேரடி உபதேசம் வேண்டி நின்றார் ஆனால் உபதேசம் அவருக்கு உடனடியாகக் கிடைக்கவில்லை. ஒரு நாள் விடியலுக்கு முன்பான சமயம், சோஃபாவில் சாய்ந்திருந்த பகவான், அனைவரும் விழிப்பதற்கு முன்பாகவே எழுந்து வெளியே செல்வதைக் காண்கிறார் இளைஞர். தானும் மறைந்து பின் தொடர்கிறார். பகவான் வெளியே வந்து மூன்று கற்களை வைத்து, அவற்றின் இடையே விறகுச் சுள்ளிகளை வைத்து

அடுப்பு மூட்டுகிறார். நெருப்பு பற்றி எரியும் போது அதன் மீது ஒரு பாத்திரத்தை வைத்து, அதில் வெள்ளையாக ஒரு மாவினை இட்டு நீருற்றுவதைக் கண்டார். அந்தத் திரவம் கொதிக்க ஆரம்பித்துவிட்டது. ஒஹோ! பகவான் ஒரு சித்த புருஷர், ஏதோ காயகல்பம் ரகசியமாகத் தயாரிக்கிறார் போலும் என்று எண்ணினார் குஞ்சுசுவாமி.

அந்த வெள்ளைத் திரவம் பக்குவமாகக் கொதித்து முடிந்த பின்னர், பகவான் அதனை எடுத்து ஒரு அகன்ற தட்டில் ஊற்றினார். எல்லாம் அறிந்தவரல்லவா? நம் பகவான், மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த, குஞ்சு சுவாமியை, குஞ்சு இங்கே வா! என்று கூப்பிட்டார். அதே சமயம் பக்கத்தில் இருந்த ஒரு கூடையைத் திறந்தார் பகவான். என்னவோ, ஏதோ என்று எதிர்பார்த்திருந்த குஞ்சு சுவாமியின் கண்கள் வியப்பால் விரிந்தன. அந்தக் கூடையிலிருந்து மிகச் சிறிய நாய்க் குட்டிகள் நான்கு அவசர அவசரமாக வெளியே ஒடி வந்தன. அந்தத் தட்டில் ஊற்றப்பட்டிருந்த சூடான கஞ்சியைக் குடிக்க ஒன்றின் மேல் ஒன்று விழுந்து ஓடி வருவதைக் கண்ட பகவான், குஞ்சு! நாலையும் பிடி! என்றார். குஞ்சுசுவாமி நான்கு, குட்டிகளையும் பிடித்துக் கொண்டார். அவை ஒன்றின் மேல் ஒன்று விழுந்து கஞ்சியைச் சிதறடிக்காமல் இருக்க ஒவ்வொன்றாக விடு! என்றார் பகவான். அதே போல் குஞ்சுவாமி, ஒவ்வொரு நாய்க் குட்டியாக விட, அவை மெதுவாக அருந்திப் பசியாறின.

இந்நிகழ்ச்சி எல்லா உயிரினங்கள் மீதும் பகவான் கொண்ட பரங்கருணை மட்டுமல்ல. அவரது குறிப்பால் உணர்த்தும் உபதேசத்தையும் காட்டுவதாகக் குஞ்சுசுவாமி. குறிப்பிடுகிறார். ஐம்புலன் ஆசைகளிலும், செயல்களிலும் சிக்கி மயங்கும் ஜீவன் கடைத்தேற சாதன சதுப்யம் எனப்படும் நான்கு வழிகளையும் கைப்பிடிக்க வேண்டும். அவை:



*1. நித்யாநித்ய வஸ்து விவேகம் - எது நிலையானது, எது நிலையற்றது என்பதை அறிந்து, நிலையான ஆன்மாவைப் பற்ற வேண்டும்.*

*2. இகமுத்ரார்த்த பலபோக விராகம் - உலக பொருள்களின் மீது பற்றின்மை.*

*3. சமாதி ஷட்க சம்பத்தி - சமம், தமம் யோகம் போன்ற ஆறு ஆன்மிகப் பயிற்ச்சிகளைத் தொடர்தல்.*

*4. முமூட்சுத்துவம் - ஆன்ம ஞானம் அடைய வேண்டும் என்ற தீவிர தாகம். இந்த நான்கையும் கடைப்பிடி! என்பது பகவானின் குறிப்பால் உணர்த்தப்பட்ட உபதேசம். ஒவ்வொன்றாக விடு! என்றால் என்ன? உலகப் பற்றினை விடுதல் என்பது. தேவை தான் ஆயினும், பெரும்பாலான சாதகர்கட்கு எல்லாப் பற்றுகளையும் ஜடபரதர் போன்று உடனடியாகத் துறத்தல் என்பது இயலாத காரியம். எனவே,*

ஒவ்வொரு பற்றுதலாக விட்டுக் கொண்டே வா அந்தப் பற்றுதலால் ஏற்படும் துன்பம் மறையும். இறுதியில் இவ்வாறாக அனைத்துப் பற்றுகளையும் தொலைத்த பின்னர் பேரின்பம் கிடைக்கும்.

***அற்றது பற்று எனின்***
***உற்றது வீடு!***

என்று திருமூலரும்

***யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்***
***அதனின் அதனின் இலன்!***

என்று வள்ளுவர் குறிப்பிடும் வழியும் இதையே. இப்பேருண்மையைப் பகவான் குறிப்பால் உபதேசித் ததைக் குஞ்சுவாமிகள் கூறுகிறார்.

பற்றுகளை விட்ட ஞானிக்கும், ஏனையோருக்கும் என்ன வித்தியாசம்! பிறருக்குத் துன்பம் தருகின்றது, ஞானிக்குத் துன்பம் தருவதில்லை. புத்தர் கூறுவது போல், நம் அனைவரது துன்பத்திற்கும் காரணம் புலனின்பமாகிய ஆசைகள். நாம் அனைவரும் ஐந்து இந்திரியங்களின் அடிமைகளாகச் செயல்பட்டு, அதனால் துன்பம் அடைகிறோம். ஞானியோ ஐம்பொறிகளையும் அடக்கி ஆள்பவன். எனவே அவன் துன்பத்தைக் கடந்தவன்.

***மாங்காய் பாலுண்டு மலைமேல் இருப்போர்க்குத்***
***தேங்காய்ப் பால் ஏதுக்கடி! - குதம்பாய்!***
***தேங்காய்ப் பால் ஏதுக்கடி?***

என்று குதம்பைச் சித்தர் பாடுகிறார். இந்தப் பாடல் குறிப்பாக உணர்த்தும் அறிவு எது? மாங்காயைக் கிளையிலிருந்து ஒடிக்கும் போது அதன் காம்பிலிருந்து பால் போன்ற திரவம் சொட்டும். இதனையே மாங்காய்ப் பால் என்பர். நாம் மாங்காயைச் சாப்பிடும் போது தப்பித் தவறி அந்தப் பால் சிறிது பட்டுவிட்டாலே புண்ணாகி விடும். அப்படிப்பட்ட வீர்யமுள்ள பாலையே அருந்துபவன் எப்பேர்ப்பட்டவனாக இருக்க வேண்டும்! அந்த மாங்காய்

பாலையே உண்டு, அதனால் பாதிக்கப்படாமல் அமைதியாக மலை உச்சியில் வீற்றிருப்பவன் யார்? அவனே ஞானி! மாங்காய்ப் பால் பட்டு சாமானியருக்கு ஏற்படும் புண்ணினை ஆற்ற தேங்காய்ப் பால் சாப்பிட வேண்டும். ஐம்பொறிகளையே தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஞானியோ எந்த விதமான கர்மங்களையும் செய்ய வேண்டிய தேவையே இல்லை. அவன் புலன்களை அடக்கி ஆண்டு, ஆன்மசாட்சாத்கார சரீரத்தில் ஆனந்தமாக வீற்றிருக்கிறான். அவனுக்கு எந்த விதமான கர்ம பலனை அழிக்க பூஜை, பனஸ்காரம் போன்ற எந்த வழிபாடும் தேவையில்லை. இதனை,

**சாதுக்க ளாவார் சகவாச நண்ணினா**
**லேதுக்கா மிந்நியம மெல்லாமு - மேதக்க**
**தண்டென்றன் மாருதந் தான்வீச வேவிசிறி**
**கொண்டென்ன காரியநீ கூறு**

என்று பகவான் உள்ளது நாற்பது அநுபந்தத்தில் கூறுகிறார். ஆன்ம சாட்சாத்காரம் அடைந்த சாதுக்களைச் சார்ந்தாலே போதும். வேறு எந்த நியமமுமே தேவையில்லை.

பகவானாம் தேசிகன் வழிகாட்ட, நாம் நம் கீழ் நிலையிலிருந்து உயர்ந்த பரிணாமத்தை அடைகிறோம். தாழ்நிலத்தில் இருக்கும் போது குறுகிய அளவிலேயே நம் பார்வை உள்ளது. மேலே மாடிக்குச் சென்றால் மேலும் விரிவான பகுதி தெரியும். அதற்கு மேல் பார்வை விரிந்து போகாதபடி சுவர்களும், கட்டிடங்களும், மற்றத் தடைகளும் தடுக்கின்றன. நமது முயற்சியால் மேலே செல்லச் செல்ல பல தடைகள் தாழ்ந்து போய் மறைந்து போகின்றன. மலை உச்சியினை அடையும் போது, தடைகள் யாவுமே மறைந்து போய் ஓர் பேரானந்தம் மட்டுமே நிற்கிறது. இதுவே பால் பிரண்டன் போன்ற பலரது அநுபவம். பல்வேறு சந்தேகங்களுடன் வந்தவர்கட்கு பகவான் சந்நதி விசேஷத்தால் கேள்விகளே இடம் தெரியாது மறைந்து

போய் பேரமைதி நிலவி நிற்கும் நிலை வருகிறது. இந்தப் பேரமைதி நிலையை அருணகிரியார் விவரிக்கிறார்.

**ஒளியில் விளைந்த உயர்ஞான பூதரத்து உச்சியின் மேல்**
**அளியில் விளைந்ததோர் ஆனந்தத் தேனை அநாதியில்**
**வெளியில் விளைந்த வெறும் பாழை பெற்ற வெறுந்தனியை**
**தெளிய விளம்பியவா முகம் ஆறுடை தேசிகனே!**
***(அளி-பேரன்பு)***

மலை உச்சியில் உள்ள கைபடாத தேனைச் சுவைக்க வேண்டுமெனில் ஒன்று, மலை உச்சியின் மேல் முயன்று ஏற வேண்டும். அப்படி ஏறினாலும், சூரிய ஒளி இல்லை எனில் தேனிருக்கும் இடம் தெரியாது. இருண்ட உலகினில் சூரிய ஒளி எழுந்த மாத்திரத்தில் கீழே உள்ள பொருட்கள், வீடுகள் அனைத்தும் தெரியும். மலையும் தெரியும். மலை உச்சிக்கு ஏறிச் சென்ற பின்னர் மரத்தின் மேலுள்ள தூய தேனை சூரிய ஒளியால் கண்டு மகிழ்ந்து பேரின்பம் அடைகிறோம். எப்பொழுதுமே மலையும், மலையின் உச்சியில் தேனும் உள்ளது. என்னைச் சுற்றிலும் என்னுள்ளும் இருள் சூழ்ந்து இருந்தால் எனக்கு ஒன்றுமே தெரியாது. என்னுடைய அஞ்ஞானமாகிய காரிருள் மயக்கத்தில் நான் முட்டாள்தனமான செயல்களைச் செய்து கொண்டு இருந்தேன். குருவருள் ஆகிய ஒளி என்னுள் பாய்ந்த மாத்திரத்திலே இருள் விலகியது. ஆன்மிக சாதனையாகிய மலை தெரிந்தது. என்னுடைய விசார அப்யாசமாகிய முயற்சியாலே அதன் மீது ஏறி, அங்குள்ள ஆத்மசாட்சாத்காரமாகிய தேனைப் பருகி பேரானந்தம் அடைந்தேன்.

ஞாயிற்றின் ஒளியால் எப்படி புற இருள் நீங்குகிறதோ, அதே போல குருவின் திருவருளால், ஞான ஒளி தோன்றி அக இருள் நீங்கும். பந்தபாசங்கள் அறும். அப்புறம் ஞானமலையின் மீது ஏறி நம் அருள் நோக்கம் விரிவடைந்து, இறைவன் அருளாகிய அந்தமில்லாக் கண்ணினால் நம்

*ஸ்வரூபம் புலப்படும். அறிவின் துணை கொண்டு ஆரம்ப முயற்சி செய்கிறோம். அந்த அறிவின் துணை கொண்டு மலை ஏறுகிறோம். சாதனை முற்றுப் பெறும் போது அறிவுக்கு வேலை இல்லை. அப்போது உலகளாவிய பேரன்பு தோன்றுகிறது. அறிவு முற்றுப் பெறுகின்ற இடத்தே, அன்பு விளைகின்ற இடத்திலே அநுபவம் தோன்றுகின்றது. ஆன்மா இறைவனுடன் ஒன்றாகி அன்பிலே விளைகின்ற ஆனந்தத் தேனை அநுபவித்து, அதிலேயே கரைகிறது.*

***அம்புவில் ஆலிபோல் அன்புருவில் எனை***
***அன்பாய்க் கரைத்தருள் அருணாசலா!***

*என்று பகவான் பாடும் அநுபவம் இது. அதுவே பஞ்ச பூதங்கட்கும் அப்பாற்பட்டு கால எல்லை கடந்து அநாதியிலே வெளியில் விளைந்த வெறும் பாழ் என்ற மகோன்னத நிலை. அங்கே ஆத்மாவைத் தவிர வேறு பொருளே இல்லை. அதுவே அருணகிரி குறிப்பிடும் வெறும் தனி.*

*பகவான் வாக்கிலேயே இதைக் காண்போம். ஆன்மாவில் அகந்தை கனாதலுடன் ஜீவனது தனித்தன்மை அற்றுப் போகிறது. ஜீவன் தன் மூல சொரூபமே ஆகிறான். அங்கே யார், எதற்கு, எப்படிச் சரணடைவது? இந்நிலையே பக்தி, ஞானம், விசாரணை முதலிய அனைத்தின் முடிந்த நிலையாம்.*

***யானே என்னை அறியகிலாதே***
***யானே என் தனதே என்றிருந்தேன்***
***யானே நீ என்னுடைமையும் நீயே***
***வானே ஏத்தும் எம் வானவர் ஏறே! - (திருவாய்மொழி 2-9-9)***

*என்று இந்நிலையை நம்மாழ்வார் எவ்வளவு தெளிவாகக் கூறி இருக்கிறார்!*

*பொருள் - என்னையே நான் அறியாது நான் என்றும், எனது என்றும் மயங்கி இருந்தேன் (உண்மையை ஆராயுமிடத்து)- நான், நான் என்பது நீயே தான், என்*

*உடமை யாவும் நீயே, அகண்ட ஞானம் பெற்றவர் ஏத்தும் பரம் பொருள் நீயே! (பகவான் நம்மாழ்வார் பற்றிக் குறிப்பிடல் - பகவத் வசனாம்ருதம் - பக்கம் 205-207).*

*மேலும் பகவான் கூறுகிறார். சரணடைய முயற்சி மேற்கொள்ளும் போதெல்லாம், அகந்தையும் தலை தூக்கும். அதனை அடக்கி ஒடுக்கவும் முயல வேண்டி வரும். சரணாகதி அவ்வளவு எளிதான காரியம் அல்ல. பரமனே தனது அருளால் பக்தனின் மனத்தை உள்ளுக்கு இழுத்து நிலை நிறுத்தினால் அன்றிப் பூரண சரணாகதி நிலை நிறைவேறுவது கடினம். (*Day by Day with Bhagavan p.227)

*ஆன்ம ஞான சிகரத்திலிருந்து பகவான் கூறுகிறார். அகந்தை என்பது கூட ஒன்று தனியாகக் கிடையாது என்கிற போது, அது எங்கிருந்து எழும் அதன் மூலமாகிய அஞ்ஞானமும் இல்லை, அகந்தையும் இல்லை. அதைப் பற்றி எழும் பிரச்சினைகளும், துன்பங்களும் சற்றும் இல்லை என்பதை அறிவோம். அதைத்தான் அகந்தை அழிந்து விட்டது என்கிறோம். (*Talks *197 வசனாம்ருதம் 2 பக்கம் 96). இதுதான் வெறும் பாழில் விளைந்த தனி என்னும் ஞானம்.*

*நம்முள்ளே ஊறி வருகின்ற இந்தப் பரமானந்தம் பெற அவசரம் ஏதும் தேவையில்லை. வேகம், விவேகத்துக்குத் தடை. வேகம் கெடுத்தாண்ட வேந்தன்! என மணிவாசகர் சிவபெருமானைக் குறிப்பிடுகிறார். இறைவன் அருள் நம் உள்ளத்தே மெல்ல மெல்ல முகிழ்கிறது*

***மெய்யன்பினால் மெல்ல மெல்ல உள்ளே***
***அரும்பும் தனிப் பரமானந்தம்***
***தித்தித்தது அறிந்த அன்றே!***

*என்பது கந்தர் அலங்காரம். நீண்ட நாள் நோயிலே வாடிய ஒருவனுக்கு நோய் தெளிந்தவுடன் உணவைக் கொஞ்சம்,*

*கொஞ்சமாகக் கொடுங்கள் என்று வைத்தியர் கூறுவார். பற்பல காலமாக பிறப்பு, இறப்பு ஆகிய நோயில் வேதனைப்பட்டு கருகுகின்ற உயிர்கட்கு இறைவன் அருள் தண்ணீர் கொஞ்சம், கொஞ்சமாகத் தான் பாய வேண்டும். சிறை உறா நீர் போல சிந்தை வாய்ப் பாய்தல் - அணை உடைந்த வெள்ளம் போல் பாய்தல், மாணிக்க வாசகர் போன்ற அருளாளர்க்கே சாத்தியம். நம்மைப் போன்றோர்க்கு அது ஒரு வாய்க்கால் வழியாக மெதுவாகத்தான் வரும்.*

***ஸனை: ஸனைரு பரமேத்***
***புத்த்யா த்ருதி கிருஹீதயா***
***ஆத்ம ஸம்ஸ்தம் மனஹ்க்ருத்வா***
***ந கிஞ்சிதபி சிந்தயேத்! - (ஸ்ரீமத் பகவத் கீதை, 6-25)***

*எனக் கண்ணன் அறிவுறுத்துகிறான்.*

*மெதுவாக, மெதுவாக ஆத்மசாதனையில் முன்னேறுங்கள். குறிக்கோளை புத்தியில் திடமாகப் பற்றிக் கொள்ளுங்கள். ஆத்ம விசாரணையே மனதில் ஆழப் பதியட்டும். வேறு ஒரு எண்ணமும் எண்ணாதீர்கள்! என்பது கண்ணன் காட்டும் வழி.*

*ஒரு நூலைப் படித்துக் கொண்டிருக்கும்போது தூக்கம் வந்து மெல்ல மெல்லப் பற்றிக் கொள்கிறது. அந்தத் தூக்கம் படரப் படரக் கையிலுள்ள புத்தகம் தானே நழுவி விழுகிறது. இறைவனை மெய்யன்பினோடு மெல்ல மெல்லத் தியானிப்பதால் பரமானந்தம் நம்முள்ளே படர்கிறது. அப்போது அதுகாறும் இனிமையாகத் தோன்றிய உலக விஷயங்கள் யாவும் தாமே நழுவி விழுந்து விடுகின்றன.*

*மெல்ல மெல்ல இறைவனை அறிக! என்று கூறும் போது தாமச குணத்தைக் குறிப்பிடவில்லை. அமைதியான தியானம் செய்ய வேண்டும். இறைவன் நாமத்தை உச்சரிக்கும்போது அது நமது உள்ளத்தே பதியும்படி ஜபிக்க வேண்டும்.*

குருநாதனை இதயம் ஒன்றி தியானித்தாலே பரமானந்தம் அரும்பும். மேல் ஒன்றும் இல்லாத பரமானந்தம் அது.

புளிக்கும் மாங்காய் மரத்திலே தொங்கும்போது அந்தப் பச்சை மாங்காயைப் பறித்தால் அது கண்ணீர் விடுவது போல் பால் வடிகிறது. அது மெல்லப் பழுக்கும் போது, பச்சை நிறம் பொன்னிறமாகி, புளிப்பு இனிப்பாகிறது. நன்றாகப் பழுத்த கனி யாரும் பறிக்காமலே தானாகவே மரத்திலிருந்து நழுவி விழுகிறது. படிப்படியாக இந்த நிலை வருகிறது. இறைவனை மெய்யன்போடு மெல்ல மெல்ல தியானிக்கத் தொடங்கினால், பரமானந்தம் நம்மை வந்து அடையும்.

உலக விஷயங்களிலேயே ஆனந்தம் இருப்பதாக நாம் எண்ணிக் கொண்டு இருக்கிறோம். அதை விட மிக உயர்ந்த பேரின்பம் உள்ளது என்பதை நம்மால் உணர முடியவில்லை. குருநாதன் அருளினால் நமக்கும் பக்குவம் வந்த பிறகு, ஆஹா! இதுவரை அப்பேரானந்தத்தை அறியாமல் இருந்து விட்டோமே என்ன முட்டாள்தனம்! என நம்மை நாமே நோக்கி நகைக்கிறோம். இதைத் தாயுமானவர் ஓர் அழகிய உவமையில் கூறுகிறார்.

**கன்னிகை ஒருத்திசிற் றின்பம் வேம்பெனினும்**
**கைக் கொள்வள் பக்குவத்தில்**
**கணவன் அருள் பெறின்முன்னே சொன்னவாறென்னெனக்**
**கருதி நகையாவள் - அது போல**
**சொன்னதை கேட்கும் இப்பேதைக்கு நின் கருணை**
**தோன்றிய சுகாரம்பமாம்!**

பக்கத்துப் பக்கத்து வீடுகளில் ஒரு சிறுவனும், அவனை விடச் சிறிய சிறுமி ஒருத்தியும் வெவ்வேறு குடும்பத்தில் இருக்கின்றனர். ஒரு நாள் விளையாடும்போது அவன் அவள் கையைப் பற்ற, வெறுத்து அவள் ஓடிவிடுகிறாள். இந்தச் சிறுமி பக்குவம் அடைந்த பின் அவனே அவளை மணந்து கொள்கிறான். அப்போது அவன் கைப் பற்றும்

போது சுகம் பெறும் அவள் அடடா! இது நாள் வரை இந்த சுகம் தெரியாமல் போய் விட்டதே! அன்று அவர் கைப்பற்றியதை ஒதுக்கினோமே என்று எண்ணி நகைக்கிறாள்.

நம் உள்ளங்களில், நாம் இன்று அந்த பேதைச் சிறுமி போல், ஆண்டவனைத் தியானிப்பதால் இன்பம் பெறாமல் இருக்கிறோம். இன்றும் மனப் பக்குவம் அடையாததால் மெய்யன்போடு தியானிப்பதில்லை. குருநாதன் திருவருளால் நமக்குப் பக்குவம் வந்து இறைவனைத் தியானிக்கும்போது பேரானந்தம் நம் உள்ளத்தில் அரும்பும். அதைச் சுவைத்த பிறகு அடடா! இந்தப் பேரின்பம் அறியாமல் இத்தனை நாள் இருந்தோமே! உலகப் பொருள்களை எல்லாம் புலன்களின் வாயிலாகச் சுவைப்பதையே இன்பம் எண்ணி ஏமாந்திருந்தோமே! என்ன பைத்தியக்காரத்தனம் இது! என்று எண்ணுவோம். அத்தருணம் உலக இன்பங்கள் சுவை அற்றுப் போய் அருளின்பம் அரும்பி நம்மை முழுதுமாக அணைத்துக் கொள்ளும்.

மறுபடி மறுபடி நாம் மனதில் கொள்ள வேண்டிய விஷயம் யாதெனில், இறைவனை அல்லது சத்குருவை உள்ளன்போடு தியானித்தால் நமது தொல்லைகள் யாவும் நீங்கும் என்ற திட நம்பிக்கைதான். இந்த நம்பிக்கையும், இறைவனை அடைய வேண்டும் என்ற பேராவலும் இன்றி, வெறும் தத்துவ நூல்களைப் பயிலுவதால் ஆன்மிகமாக எந்தப் பயனும் இல்லை. இரயில் வண்டியில் ஓர் ஊரை அடைய வேண்டும் என்று தீர்மானிக்கிறார்கள். கால அட்டவணை (Railway Time table) புத்தகத்தை ஊன்றிப் படித்து எவ்வாறு அந்த லட்சிய ஊரை அடைய வேண்டும் என்று தீர்மானிக்கிறார்கள். அதையன்றி, பிரயாணமே செய்ய நினைக்காத ஒருவன் கையில் அந்த அட்டவணைப் புத்தகத்தைக் கொடுத்தால், அவன் பொழுது போக்காக

அதைப் பார்ப்பானே அன்றி, அவன் மனம் அதில் பதியாது. ஆன்மிகப் பயணமும் அப்படித்தான். இறைவனை அடைய வேண்டும் என்ற தீவிர எண்ணம் இருந்தாலன்றி, வெறும் சமய நூல்களைக் கற்பதால் பயன் ஏதுமில்லை.

வேதங்கள், சாஸ்திரங்கள் முதலியவற்றில் ஏராளமான விஷயங்கள் இருந்தாலும் அவை எல்லாம் முக்கியமானவை அல்ல. ஒரு பெரிய மரத்தின் அடியில் இருந்து பார்த்தால் பல்வேறு கிளைகளும், படர்ந்த இலைகளும், உச்சியில் பழுத்திருக்கும் சில பழங்களும் தெரியும். இந்தப் பெரிய மரத்தில் இவ்வளவு இலைகள் ஏராளமாக உள்ளனவே அவற்றை எல்லாம் நாம் பறித்துக் கொள்ளலாமா? என்று நினைப்பவர், அந்த மரம் தரும் சிறந்த பயனை அடைய முடியாது. அந்த மரத்தின் சிறந்த பயன், வெளியே கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருக்கும் கனிகளால் தான் அமையும் என்று உணர்பவர்கள், இலைகளை விட்டு விட்டு, கனிகளைக் கண்டுபிடித்து உண்பர். அந்த உண்மை அறியாதவர்கள், மற்றும் பழம் சுவைக்கும் ஆவல் அற்றவர்கள், நாள் முழுவதும் மரத்தின் அடியில் இருந்தாலும், அதன் கனியை உண்டுப் பயனடைய மாட்டார்கள்.

அதைப் போன்று, பல்வேறு சமய நூல்கள் அனைத்தும் நமக்கு இறை உணர்வை ஊட்டி, நம்மைப் பரமானந்தத்தில் மூழ்கச் செய்து மற்றைய யாவற்றையும் தள்ளச் செய்ய வந்தவையே. அவை கூறும் மற்ற விஷயங்கள் யாவும் - ஜபம், பூஜை, யோகம் - அதற்குச் சார்பாக உள்ளவையே. அவை இறைவனது குறியீடுகளை நமக்குச் சொல்கின்றன. அவனை அடையும் வெவ்வேறு வழிகளையும் கூற வந்தவை. இறைவனை அறிய வேண்டும் என்று பேராவலுடன், முயல்பவன், இறைவனது குறியீடுகளும், நெறிகளும், நின்ற நேர்மையும் எத்தகையன என்று ஆர்வத்தோடு அறிய முற்படுவான். அத்தகைய தீவிர

ஈடுபாடு இல்லாதவன், ஆயிரம் முறை வேதம் பயின்றாலும் ஆயிரம் நூல்களைப் படித்தாலும் அவன் மனதில் மெய்யுணர்வு, இரயில்வே கால அட்டவணையைப் படிப்பது போலத்தான் ஆகும்.

மாறாக இறைவனது அருளுக்காக சத்குருவின் கடைக்கண் நோக்குக்காக ஏங்கி நிற்கும் உண்மையான சாதகனுக்கு ஒரே பாட்டு, ஒரே சுலோகம், ஏன், ஒரே வரியே கூடப் போதும். அருணாசலம் என்ற அந்த ஒரு சொல்லே மெய்யன்பன் செவியில் விழுந்தவுடன், அவனை உள்முகமாகத் திருப்பி ஆத்ம தரிசனம் பெறச் செய்கிறது.

இறைவனை அடையும் எண்ணம் சிறிதும் இல்லாத வெறும் படிப்பாளிகளைக் குறித்து நாவுக்கரசர் எள்ளி நகையாடுகிறார்.

***குறிகளும் அடையாளமும் கோயிலும்***
***நெறிகளும் அவை நின்றதோர் நேர்மையும்***
***அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்***
***பொயியிலீர்! மனம் என் கொல் புகாததே?***

***(குறிகள் - பரம் பொருளின் பெயர்கள், அடையாளங்கள்***
***கோயில்- உபநிடதங்கள், இயற்கை சூழல்கள், ஆலயங்கள் அனைத்துமே கோயில்***
***நேர்தல் - நுட்பம்,*** subtlity
***நேர்மை*** - sublimity
***ஆரணம் - வேதங்கள்)***

புறத்தே உள்ள பல்வேறு இறைவனின் குறியீடுகளும், வெளிப்பாடுகளும் அகத்தே தான் என்னும் இருப்புணர்வு பற்றியே நிற்கின்றன. ஆயிரம் வேதங்கள் ஓதினாலும், மனத்தை உள்முகமாகத் திருப்பி ஆத்ம விசாரம் செய்தால் அன்றிப் பயன் ஏதும் இல்லை. எனக்குள் தானாக ஒளிரும் இந்த ஆத்மாவை விசாரித்து அறியாமல், பயனற்ற நூல்களை ஓதுகின்றீர்களே என்ன பயன்? என்பது உட்பொருள், நீ அஞ்ஞானி என்ற எண்ணத்தை விட்டு விடு. வெளியே செல்கின்ற மனத்தை இதயத்தே ஒலிக்கின்ற நான் யார்

என்பதை உன்னுள்ளே விசாரித்து அறி. இந்த ஆத்ம வித்தை அதி சுலபம் என்று பகவான் கூறுகிறார். இதனை இப் படிப்பாளிகளுக்கு ஊட்டினால், என்ன முட்டாள்தனம்? அப்பரம்பொருளை இவ்வளவு எளிதாகக் காண முடியுமா என்ன? என்று ஏளனம் செய்யலாம். ஐந்தாம் திருமுறையில் ஆதிபுராணம் குறுந்தொகையில் அப்பர் இதற்கு ஒரு கதை மூலமாகவே விடையளிக்கிறார்.

ஒரு பெரிய சமுத்திரத்தில் வாழும் ஒரு கடலாமை ஒரு நாள் வெளியே வந்து நடை பயின்றது. சில காததூரம் அது சுற்றுச் சூழலை வேடிக்கை பார்த்து கொண்டே மெல்ல நகர்ந்து வந்தது. வழி நடப்பின் களைப்பால் அதற்கு இளைப்பாற நீர்நிலை தேவைப்பட்டது. அப்போது அருகே ஒரு கிணறு தென்பட்டது. உள்ளே குதித்து, கடலாமை மூழ்கியது. அங்கேயே பிறப்பிலிருந்து வாழ்ந்து வரும் ஒரு கிணற்று ஆமை, கடல் ஆமையைப் பார்த்து, நீ எங்கிருந்து வருகிறாய்? என்று கேட்டது. நான் கடலிலிருந்து வருகிறேன் என்றது கடலாமை. கிணற்றைத் தவிர வேறு ஒன்றையுமே பார்த்து அறியாத கிணற்றாமை கடலா அப்படியென்றால் என்ன என்று வினவியது?

அது ஏராளமான நீர் உள்ள இடம் என்றது கடலாமை. அப்படியா! இந்தக் கிணற்றைப் பார்த்தாயா எவ்வளவு பெரிதாக உள்ளது! நீ வசிக்கும் கடல் இவ்வளவு பெரிதாக இருக்குமா? என்று கேட்டது கிணற்றாமை. கடல் மிக மிகப் பெரியது. அதன் ஒரு பக்கம் கடற்கரை. மறு பக்கத்தைக் காணவே முடியாது, அவ்வளவு பெரியது என்றது கடலாமை. அதன் சொற்களை நம்பாத கிணற்றாமை அது எப்படி முடியும் கரை இல்லாமல் தண்ணீர் நிற்குமா? நிச்சயமாக எனது கிணறு உனது கடலை விட மிகப் பெரியது! என்று கூறியது. அங்கே இருந்த கிணற்றுத் தவளையும் ஆம்! ஆம்! நானும் பல கிணறுகட்குச் சென்று பார்த்துள்ளேன், இந்தக் கிணற்றைப்

*போல பெரிய நீர்நிலை எங்குமே இல்லை! என்றது. கடலைப் பற்றி என்ன சொன்னாலும் இவைகட்கு விளங்காது. ஏனெனில் இவர்கள் மனம் இந்தச் சிறிய நீர் நிலையையே சார்ந்துள்ளது. கடலின் எல்லையற்ற தன்மை இவர்கட்கு புரியாது என்று எண்ணிய கடலாமை சரி நான் போய் வருகிறேன்! என்று கூறிவிட்டுப் புறப்பட்டது.*

*அது போல் தான், ஸ்ரீ பகவான், ஸ்ரீ ராமகிருஷ்ணர் போன்று பரம்பொருளுடன் முழுதுமாய் அத்வைத நிலையில் ஒன்றிய அருளாளர்கள், அஹம் ப்ரஹ்மாஸ்மி, நாமே அந்தப் பரம் பொருள்! உன்னை நீயே பரம் பொருள் என உணர்வாய்! ஆன்ம ஞானவழி அதி சுலபம்! என்று முரசறைகிறார்கள். இந்த அதி உன்னத ஆன்மிக சிகரத்தை அறியாத வெறும் புத்தக பண்டிதர்கள் இது என்ன மடத்தனம், சர்வ வல்லமை வாய்ந்த பரம்பொருளை நம்மால், உணர முடியும்? அது மிகவும் கடினம், ஆத்ம வித்தை அதி சுலபம் என்பதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது என்பார்கள். இதைக் கேட்கும் போது இந்தத் திருமூலர் பாடல்தான் நினைவுக்கு வருகிறது.*

***கூவல் ஆமை குரைகடல் ஆமையைக்***
***கூவலோடு ஒக்குமோ கடல் என்றல் போல்***
***பாவகாரிகள் பார்ப்பது அரிது என்பரால்***
***தேவதேவன் சிவன் பெருந்தன்மையே!***

*(கிணற்றுவாசியாகிய ஆமை, அலைகள் ஒலிக்கின்ற பெருங்கடலில் வாழும் ஆமையிடம் கிணற்றுக்குச் சமானம் ஆகுமா கடல் என்று கடலின் பெருமையை அறியாது கேட்பது போல் பாவம் செய்தவர்கள் தேவதேவனாம் சிவனின் அருளை நாம் அநுபவத்தால் உணரமுடியாது என்று கூறுவார்கள்.) (கூவல் - கிணறு).*

*எனவே ஆத்ம ஞானம் பெறுதல் மிகக் கடினம், நம்மால் அது சாத்யப்படாது என்று கூறுவோரின் வாக்கைச் செவிமெடுக்காது ஆன்ம வித்தை அதி சுலபம் என்று*

கூறும் பகவான் வாக்கை தீவிர நம்பிக்கையுடன் பின்பற்றினால் ஆத்ம சாட்சாத்காரம் நிச்சயம். அதற்குத் தேவை ஒன்று! குருவின் வார்த்தையில் தீவிர நம்பிக்கை. அதனையே பின்பற்றினால் அஹங்கார, மமகாரங்கள் அறுபடுகின்றன.

குருவாம் இறைவனின் அருள் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது. அவருடைய அருளை நாடிச் செல்வோர்க்கு வினையின் திரள் எவ்வளவு இருந்தாலும், அது ஒடுங்கி விடுகிறது. அருள் நாட்டம் கொள்பவர்க்கு வினையின் ஆதிக்கம் முன்னுக்கு வருவதில்லை. தீவிரமான துயர் ஒருவனைப் பற்றும் போது, அவனுக்கு எந்தச் சுகத்தைப் பற்றியும் எண்ணம் வருவதில்லை. அந்தத் துயரத்தின் வலியே மற்ற உணர்வுகளைப் பின் தள்ளி விடுகிறது. மாறுபடுகின்ற இரு உணர்ச்சிகள் ஏக காலத்தில் மனதில் முன்னுக்கு வர முடியாது. எனவே, தீவிரமான அருள் தாகத்துடன் இறைவனை நாடி இருப்பவர்க்கு வினையின் பயன் என்ற கோட்பாடு உரு எடுப்பதற்கே இடம் இல்லாமல் போகிறது. அப்போது அகங்கார மமகாரங்கள் வேருடன் அழிகின்றன.

ஸ்வாமி சித்பவாநந்தர் கூறுகின்ற உதாரணப்படி, மரத்திலுள்ள ஒரு சிறிய புளியம் பிஞ்சு முதிர்ந்து பெரிதாகிறது. பிறகு முற்றிக்காய் ஆகிறது. இறுதியில் பழுத்துக் கனி ஆகிறது. முற்றிலும் கனிந்த பின்னர், அது மரத்தை விட்டு விலகிக் கொள்கிறது. அத்துடன் மேலே ஓடு வேறாகவும், உள்ளே உள்ள சுளை வேறாகவும் பிரிந்து கொள்கிறது. அது போலவே, உயிர், பரிணாமத்தில் புல்லாய், பூண்டாய், பறவையாய், ஊர்பனவாய், விலங்குகளாய்ப் பல்வேறு நிலைகளில் வடிவெடுக்கும் சிற்றுயிர் அஹங்காரத்தினால் உடல்களை நான் எனக் கருதிக் கொள்கிறது. அப்படிப் பல பிறவிகளில் தன் அஹங் காரத்தை மாற்றி அமைத்து பேருயிராய் பரிணமிக்கிறது.

மானுட நிலைக்கு வரும்போது இந்த அகங்காரம் உச்சத்திற்கு வந்து விடுகிறது. மனித உடல் எடுத்த பின், மற்ற சிற்றுயிர்கள் பரிணமித்தது போல் சரீர அமைப்பை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அதன் பின் ஏற்படுகின்ற முன்னேற்றம் எல்லாம் மனத்தைப் பொருத்ததாகவே அமைகிறது. மனப் பரிணாமம் ஆகுமளவு உடல் அபிமானம் போய் விடுகிறது. உடலை நாடிய உயிர் இனி உடல் நினைவைக் கடந்து செல்ல வேண்டும். அதற்காக ஞான விசாரம் செய்து பார்ப்பது அவசியமாகிறது. நான் என்னும் நினைவுக்கு இலக்காய் இருப்பது எது என்று அவன் எண்ணிப் பார்க்கிறான். உயிரே நான் என்று எண்ணியவன் இப்போது எனது உடல் என்கிறான். எது தானாய் இருந்ததோ, அது தன்னுடையது ஆகிவிடுகிறது. நாம் குடியிருக்கும் வீடு, நம் சொரூபம் ஆகி விடாது. அதே பாங்கில் என்னுடைய உடல் என்று சொல்பவன் தன் உடலுக்கு அந்நியம் ஆனவன் என்பதை ஆத்ம விசாரத்தால் உணர்கிறான். இப்படி ஸ்தூல சரீரம், மனம், புத்தி, அஹங்காரம் ஆகிய இவைகளையெல்லாம் தனக்கு அந்நியமாக உணர்ந்து கொள்ளும் போது இவன் அகங்காரத்தைக் கடந்து போகிறான். உடலுக்கு உரியவற்றையும் உள்ளத்துக்கு உரியவற்றையும் புறக்கணித்த சமயம், எனது என்கின்ற அஹங்காரம் போய் விடுகிறது. அதன் பிறகு எஞ்சியிருப்பது எது என்ற கேள்வி வருகிறது.

நான், எனது என்ற நினைவு அற்றுப் போன பின்னர் எஞ்சியிருப்பது பூன்றம் என்று பகவான் உபதேச உந்தியாரில் குறிப்பிடும் ஞானநிலை அல்லது துரிய நிறைவு நிலை, ஆழ்ந்த உறக்கம் அல்லது சுஷுப்தி நிலையிலும் யான், எனது என்றவைகள் இல்லைதான். ஆனால் அது நிறைவு நிலை அல்ல. ஏனெனில், அந்நிலையில் யான் என்ற நினைவு ஆன்மாவில் ஒடுங்கி விடுகிறது. ஆனால் நிறைவு பூன்றம், துரியம் என்ற பேர்

பெறுகிறது. அகங்காரம் அற்ற நிலையில் மனம் பூர்ண துரியமாக விரிவடைகிறது. இதனையே வள்ளுவர் குறிப்பிடுகையில்

**யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு**
**உயர்ந்த உலகம் புகும்.**

என்கிறார்.

நினைவு தெளிந்து விரிவடையும் போது ஆத்மா அடையும் ஆனந்தமும் உயர்ந்து கொண்டே வருகிறது. மனிதரில் கடைநிலையில் இருப்பவன் உடல் சம்பந்தமான இன்பத்தையே நாடுகிறான். இடையில் இருப்பவன் அறிவு சம்பந்தமான இன்பம் அடைகிறான. மக்களுள் உயர் நிலையில் உள்ளவன் ஆத்ம ஞானத்தில் இன்பத்தைப் பெறுகிறான். துரிய நிலையை, பூர்ண நிலையை அடைந்தவன் அனுபவிக்கும் பேரின்பம் இடையறா ஒன்று. அந்நிலையில் அவனிடம் இதுவரை இருந்த மன நாட்டமெல்லாம் போய் விடுகிறது. ஆத்மாவே அவனது பிரியமான தோழன். உயிர்கள் அனைத்தையும் ஆத்ம சொரூபமாகவே அவன் அறிந்து கொள்கிறான்.

**புறத்தில் கண் கொண்டு காண்கின்ற மூடர்காள்**
**அகத்தில் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்**

என்ற திருமூலர் வாக்கின்படி அந்தப் பேரின்பத்தை துரியாதீதக் காட்சியை தன் அகத்தில் கண்டு ஆனந்த மடைபவனே ஞானி. ரமணன் யார் என்று வினவிய அம்ருதானந்த யதிக்கு, ரமணனே ஞானவெளி! அதுவே சிதம்பரம்! எனப் பகவான் விளக்கிய துரிய நிலை.

கருத்துப் பரிமாறலை மீண்டும் தொடர்வோம்!

பகவான் பணியில் தங்கள்

**ராம் மோஹன்**

# அமைதிக்கு வழி

**சிவானந்தர்**

*நீங்கள் செய்ய வேண்டியவை*

1. எளிமையாக இருங்கள்
2. பணிவுடன் இருங்கள்
3. பெருந்தன்மையுடன் இருங்கள்
4. மகிழ்ச்சியுள்ளவர்களாக இருங்கள்
5. உண்மையுணர்வுடன் இருங்கள்
6. கருணையுடையவர்களாக இருங்கள்
7. விசுவாசமுடையவர்களாக இருங்கள்
8. பொறுமையுடன் இருங்கள்
9. சுயநலமற்று இருங்கள்
10. பிறரை வெறுக்காதீர்கள்
11. பிறருக்குத் தொல்லை தராதீர்கள்
12. பிறர் மனதைப் புண்படுத்தாதீர்கள்
13. தீய தொடர்பு கொள்ளாதீர்கள்
14. பிறரைக் குற்றம் கூறாதீர்கள்
15. சோம்பி இருக்காதீர்கள்
16. கோபம் கொள்ளாதீர்கள்

*17. பேராசையின் பிடியில் சிக்காதீர்கள்*

*18. பொய் சொல்லாதீர்கள்.*

*அமைதியை விரும்புகிறவன் ஒவ்வொரு நிலையிலும் பகுத்தறியக் கற்றுக் கொள்ள வேண்டும். எது சரி? எது தவறு? எது சாத்தியம்? எது சாத்தியமற்றது? ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் எத்தகைய செயல் முறையை மேற்கொள்ள வேண்டும் என்பதை ஞானிகள் தெரிவித்திருக்கிறார்கள். மறை நூல்கள் என்ன சொல்லுகின்றன? மகாத்மாக்கள் அத்தகைய சூழ்நிலையில் எப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள்? இங்ஙனம் விசாரம் செய்வது பார்வையைப் பரிசுத்தப்படுத்துவதற்கும் நேரிய கட்டளையைப் பெறவும், அவசியமாகிறது. இதெல்லாம் மனம் செலுத்தும் பாதையில் செல்வது மாயையின் பிடியில் சென்று அகப்படுவதேயாகும்.*

*பிறருடைய விஷயங்களில் அதிகமாக நீங்கள் தலையிடுகிறீர்களா? பிறர் தவறுகளைச் செய்யலாம். ஆனால் அவர்கள் விஷயத்தில் தலையிடுவதற்கு நீங்கள் யார்? எதையும் எவரையும் குறை கூறாதீர்கள். பிறர் விஷயங்களில் தலையிட்டு தீர்ப்புக் கூற இறைவன் உங்களுக்கு அதிகாரம் அளிக்கவில்லை. அமைதியைக் காக்க அவனவன் காரியத்தைக் கவனிப்பதே சிறந்த நியதி என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.*

*உங்களுடைய சொந்த வேலையைக் கவனியுங்கள். அமைதியை அதிகம் விரும்பும் ஒருவனுக்குரிய சிறந்த வழி இது தான். இவ்வுலகத்திலுள்ள எந்த ஒரு விஷயமும் உங்கள் கவனத்தை எதிர் பார்த்திருக்கவில்லை. இவற்றைக் கவனிப்பதற்கு ஒரு இறைவன் இருக்கிறார். சொல்லப் போனால் அவர் உங்களை நல்ல முறையில் பாதுகாத்து வருகிறார். இந்த உண்மையை மறக்காதீர்கள்.*

சொந்த வேலையைக் கவனியுங்கள் என்பதை மீண்டும் நினைவு படுத்திக் கொள்ளுங்கள். எதையும், எவரையும் குறை கூறாதீர்கள். நடப்பது அனைத்தும் இறைவன் செயல் என்று எண்ணி இருந்தால், மன அமைதியை நீங்கள் பெற்றுத் திகழலாம்.

உலகியல் புகழ்ச்சி மற்றும் பாராட்டுதலுக்கு ஆசைப்படாதீர்கள். இதுவே மன, உடல் தளர்வுக்குக் காரணம். பிறர் தன்னைப் பாராட்ட வேண்டும் என்று ஏன் எண்ணுகிறீர்கள்? பிறர் என்பவருள் பெரும்பான்மையோர் அறியா மாந்தர்களே. அவர்கள் உங்களைப் பாராட்டிக் கவுரவிக்க வேண்டும் என்ற எண்ணத்தை விட்டு விடுங்கள். இதற்குப் பதிலாக இறையருளையும் மகாத்மாக்களின் நல்லாசியையும் வேண்டுங்கள்.

பொது ஜன அபிப்பிராயத்திற்கு அதிகமான மதிப்புக் கொடுக்காதீர்கள். பொது மக்களின் கருத்து அதிகமாகத் தவறாகவே அமைகிறது. ஒழுக்க உயர்வு சதாசார நியதிகள் மறை நூல்களின் போதனைகள், மகாத்மாக்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளியுங்கள். நீங்கள் தவறான பாதையில் ஒரு போதும் செல்ல மாட்டீர்கள்.

எல்லா விதமான மனத்தூண்டுதல்களிலிருந்தும் விலகி இருங்கள். மனத் தூண்டுதலை உண்டு பண்ணும் இடங்களுக்குச் சென்று பின் அதைத் தடுக்க முடியாத நிலைக்கு ஆளாகாதீர்கள். அனாவசியமாக அது உங்களை கஷ்டப்படுத்தும். அப்படி ஒரு வேளை அந்தத் தூண்டுதலைத் தடுத்து நிறுத்தினாலும், அதனால் ஏற்பட்ட பதிவு உங்கள் மனதை விட்டு அகலாது. அந்த விருப்பம் அமைதியின்மையை உண்டு பண்ணும்.

உங்கள் தேவைகளைப் பெருக்கிக் கொண்டு பிச்சைக்காரனைப் போன்று எண்ணி விடாதீர்கள்.

தேவைகளைக் குறைத்துக் கொண்டு அரசனைப் போன்று இருங்கள்.

உங்களது தேவைகளை மிக மிக குறைத்துக் கொள்ளுங்கள். தேவைகள் குறையக் குறைய மன அமைதி கூடும். உடைமை துன்பத்தைத் தரும். இதற்கு விளக்கம் தேவையில்லை. ஒரு காரை வாங்கி வைத்துக் கொள்வதை விட ஒரு வாடகைக் காரை ஏற்பாடு செய்வது நல்லது.

தேவையிருந்தாலன்றிப் பேசாதீர்கள். வேண்டாத வெட்டிப் பேச்சை விட்டொழியுங்கள். அளந்து பேசுங்கள். சில சமயம் அளந்து பேசுகிற பேச்சும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு விரோதத்தை உண்டு பண்ணுகிறது. அனாவசியமாகப் பிறருக்குப் புத்திமதி சொல்லச் செல்லாதீர்கள். உங்கள் வேலையை மட்டும் கவனியுங்கள்.

வீண் விவாதம் வேண்டாம். வீண் விவாதத்தில் ஈடுபடாதீர்கள். இதனால் எந்த வித நன்மையும் கிடையாது. உங்கள் அகங்காரத்தை அது அதிகமாக்கி, அடுத்தவனுக்குத் துன்பத்தைக் கொடுத்து, நண்பர்களிடையே வெறுப்புணர்ச்சியை உண்டு பண்ணி விடும்.

அடுத்தவன் அவன் மனம் போன போக்கில் எண்ணட்டும். இந்த உலகில் திருத்த முடியாத அளவுக்கு உரிய முட்டாள்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்களைத் திருத்தும் வீண் முயற்சியில் உங்களது சக்தியையும் நேரத்தையும் வீணாக்காதீர்கள். அதனால் சோர்வும் பகைமையுமே மிஞ்சும்.

ஏதாவது நல்ல காரியத்தைச் செய்து கொண்டே இருங்கள். காலத்தை வீணாக்காதீர்கள், அதிகமாகத் திட்ட மிடாதீர்கள். திட்டமிடும் பொறுப்பு இறைவனுடையது. எனவே, சதா ஏதாவது நல்லதைச் செய்து கொண்டே

இருங்கள். இடைவெளிக்கு இடம் கொடாதீர்கள். உங்களது வாழ்க்கையில் வீணான பேரமே இருக்கக் கூடாது. நேரம் விலைமதிப்பற்றது என்பதை உணர்ந்து அதை லாபகரமாகச் செலவு செய்யுங்கள்.

சரீர அளவில் ஒய்வு எடுத்துக் கொள்ளும் போது மனதை ஜபத்திலும் பிரார்த்தனையிலும் ஈடுபடுத்துங்கள். அனைத்து நாசத்திற்கும் ஆரம்பம் மனம் தான். கடும் சொற்களும் தீய செயல்களும் மனதில் தான் ஆரம்பமாகின்றன, மனதைப் பரிசுத்தமாக வைத்திருங்கள். வாழ்க்கையெனும் நதி ஸ்படிகமாகத் திகழும்.

ஒரு பொழுதும் செய்ததற்கு வருந்தாதீர்கள். இது வரையிலும் ஏற்பட்ட அனுபவங்களிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளுங்கள். இந்தப் பாடங்கள் உங்களுடைய பிற்காலச் செயல் முறைகளை வழி நடத்தட்டும். சென்றதை எண்ணி வருந்தாதீர்கள். அப்படிச் செய்திருந்தால் நான் அப்படி ஆகியிருப்பேனே! என்றெல்லாம் எண்ணாதீர்கள். இவை அனைத்தும் வீண் சிந்தனை. கவலை ஒருவனைக் கரைத்து விடுகிறது. நடந்தவை அனைத்தும் நமது ஊழ்வினைப்படி நடக்க வேண்டியவைகளே. வேறு வகையில் அவை நடந்திருக்க முடியாது. அவைகளின் இயக்கத்திலிருந்து பேரண்டத்தின் மாபெரும் இயக்கம் வரையிலும், சென்ற நிகழ்கால, வருங்கால நிகழ்ச்சிகளின் அமைப்பிலும் ஒவ்வொரு வினையிலும் அதன் விளைவிலும் இறைவனது இச்சையே காணப்படுகிறது. நடப்பது நடந்தே தீரும். மனிதனால் அதை இம்மியளவு கூட மாற்ற முடியாது. அனைத்து நிகழ்ச்சிகளிலும் இறைவனது ஆணையைக் கண்டு மன அமைதியுடன் வாழ்வதில் தான் ஞானம் அமைகிறது. யாராலும் உங்களது முன்னேற்றத்தைத் தடுக்க முடியாது. உங்களது வாழ்க்கையில் மேன்மையும் வீழ்ச்சியும் உங்களது

பூர்வஜன்ம கர்ம வினையின் விளைவே! என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் சிறந்து விளங்க வேண்டும் என்று இருந்தால் உலகமே எதிர்த்தாலும் ஒன்றும் செய்ய முடியாது. ஒவ்வொரு நபரும் அவனது ஊழ்வினையால் ஆளப்படுகிறான். பிறருக்கு அடிபணிந்து வாழ்வது போன்று தோன்றினாலும் ஒவ்வொருவருடைய வாழ்வும் சுதந்திரமானது. இதை மறந்து விடாதீர்கள். இனி ஒரு பொழுதும் யார் மீதும் பொறாமைப்படாதீர்கள். உங்களுடைய அதிர்ஷ்டத்திற்காக அடுத்தவர்களைப் பழிக்காதீர்கள்.

சுற்றுப்புறச் சூழ்நிலை உங்களுடைய மன அமைதியைக் கெடுப்பதாக இருக்கலாம். உங்களுக்குப் பிடிக்காததாக இருக்கலாம். சூழ்நிலையை மாற்றியமைப்பதை விட்டு உங்களைச் சிறந்த நிலைக்கு மாற்றி அமைத்துக் கொள்ளுங்கள். உங்களைத் தூய்மைப் படுத்திக் கொள்ளுங்கள். இப்படிச் செய்தால் மோசமான சூழ்நிலையும் நல்லதாக மாறியமையும். இதை அனுபவத்தினால் நீங்கள் தெரிந்து கொள்ளமுடியும்.

சோதனைகளைச் சகித்துக் கொள்ளுங்கள். குணப்படுத்த முடியாததைச் சகித்தேயாக வேண்டும். இடுக்கண் வருங்கால் நகுக. எண்ணற்ற தொந்தரவுகள் வசதி யின்மைகள், கஷ்டங்களுக்கு நடுவே இருந்து பழகுங்கள். நீங்கள் பொறுமையிலும் உள்பலத்திலும் இச்சாசக்தியிலும் வளர்ச்சியடைவீர்கள். நஷ்டத்தை லாபமாக மாற்றி அமைப்பீர்கள்.

கடமைகளைப் புறக்கணிக்காதீர்கள். அதனால் மன அமைதியைப் பெற முடியாது. கவலைகள் தான் அதிகரிக்கும். கடமைகளை முடிந்த வரையிலும் நன்முறையே செய்ய முயலுங்கள். தொந்தரவை விலைக்கு வாங்காதீர்கள். வெளியுலகச் செயல் முறைகளைக்

குறைத்துக் கொள்ளுங்கள். அதிகமான நேரத்தைப் பிரார்த்தனையிலும், விசாரத்திலும், தியானத்திலும் செலவிடுங்கள். மனம் செயலற்றுப் போகும் போது தான் பூரண மன அமைதி கிட்டும். மனம் என்றால் எண்ணம். எண்ணம் என்றால் அமைதியின்மை. செயல்முறைகள் குறையக் குறைய எண்ணங்களும் குறையும். எண்ணங்கள் குறையக் குறைய மனச் சாந்தியும் கூடும். எண்ணமற்ற நிலை தான் மன அமைதி சிறந்த முறையில் அமைய வழி.

# ரமணோதயம் காப்பு நிதி தொடரும் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| திரு. K.P. ரமேஷ், ஆஸ்திரேலியா | 10,000 |
| ஸ்ரீமதி. மீனா தண்டபாணி, சென்னை-41 | 5000 |
| திரு. M. காமராஜ், நாகப்பட்டினம் | 4000 |
| திரு. V. வெங்கட்ராமன், சென்னை 61 | 3001 |
| திரு. S. சந்தான கிருஷ்ணன், சென்னை 78 | 2000 |
| திரு. பத்மினி விஜயன், ஆதம்பாக்கம் | 2000 |
| திரு. P. சேர்மராஜன், ஆஸ்திரேலியா | 1500 |
| திரு. M.S.V. ரமணன், குரோம்பேட்டை | 1005 |
| திரு. ஜெய்கணேஷ் கரேமல்லா, சென்னை 23 | 1000 |
| திரு. R. பாலசுப்பிரமணி, திண்டுக்கல் | 1000 |
| திரு. E. மீனாட்சி சுந்தரம், சென்னை 41 | 1000 |
| ஸ்ரீமதி. R. மீனாட்சி, கோயம்புத்தூர் | 1000 |
| ஸ்ரீமதி. A.R. அன்னக்கிளி, காரைக்குடி | 1000 |
| ஸ்ரீமதி. சூர்ணதர்ஷிணி, மலேசியா | 1000 |
| திரு. N. நடராஜன், சென்னை 17 | 500 |
| திரு. K. ராமகிருஷ்ணன், சென்னை 33 | 500 |
| திரு. C.R. ரமணி, சென்னை 5 | 500 |
| திரு. V. ராமகிருஷ்ணன், சென்னை 61 | 500 |
| ஸ்ரீமதி. சரளா பாலகுருநாதன், சென்னை 4 | 500 |

# சிவானந்த லஹரி

## கௌதமன்

*(81)*

***கஞ்சித்காலமுமா-மஹேஸ1 ப4வத: பாதா3ரவிந்தா3ர்சனை:***
***கஞ்சித்3த்4யான ஸமாதி4பி4ஸ்1ச நதிபி4: கஞ்சித் கதா2கர்ணனை:***
***கஞ்சித்கஞ்சித3வேக்ஷணைஸ்1சநுதிபி4:கஞ்சித்3த3ஸா1மீத்3ருஸீ1ம்***
***ய:ப்ராப்னோதி முதா3 த்வத3ர்பித மனா ஜீவன் ஸ முக்த:க2லு।।***

*உமாமஹேச்வரனே! சிறிது நேரம் திருவடிகளை அர்ச்சித்தும், சிறிது நேரம் தியான ஸமாதி நிலையடைந்தும், சிறிது நேரம் வணங்கிக் கொண்டும், சிறுது நேரம் உன் வரலாற்றை சிரவணம் செய்தும், சிறிது காலம் மூர்த்தி தரிசனம் செய்தும், சிறிது காலம் துதித்தும், இங்ஙனம் தன் மனத்தை மகிழ்ச்சியுடன் உம்மிடம் அர்ப்பணம் செய்யும் நிலையை எவன் அனுபவிக்கிறானோ, அவனே இவ்வுலகில் உயிர் வாழ்க்கையிலேயே மோக்ஷம் அநுபவிக்கும் ஜீவன் முக்தனாவான்.*

*(82)*

***பா3ணத்வம் வ்ருஷப4த்வம் அர்த4-வபுஷா பா4ர்யாத்வம் ஆர்யா-பதே***
***கோ4ணித்வம் ஸகி2தா ம்ருத3ங்க3 வஹதா சேத்யாதி3 ரூபம் த3தௌ4***
***த்வத்பாதே3 நயனார்பணம் ச க்ரு2தவான் த்வத்3தே3ஹ பா4கோ3 ஹரி:***
***பூஜ்யாத்பூஜ்ய-தரஸ்ஸ ஏவ ஹி ந சேத் கோ வா தத3ன்யோதி4க:।।***



*அம்பிகாபதியே! மஹாவிஷ்ணுலானவர் திரிபுர ஸம்ஹாரத்தின் போது பாணத்தன்மை. (உன் வாஹனமான) விருஷபத்தன்மை, நினது பாதி உடலைக் கொண்டு மனைவித் தன்மை, (உன் அடிதேடி) பன்றித்தன்மை, (மோஹினியாக) வந்த போது தோழித் தன்மை, (நடராஜ தாண்டவத்தில்) நினக்கு மிருதங்கம் வாசிப்பவனது தன்மை, இத்தகைய வடிவங்களைத் தாங்கினார். (உன்னை அர்ச்சிக்க கையில் ஒரு பூ குறைய) உனது பாதத்தில் தனது கண்ணையும் அர்ப்பித்தார். (ச ங்கரநாராயணர் அவஸரத்தில்) நினது உடலில் பாதிப் பங்கும் கொண்டார். இக்காரணங்களைக் கொண்டே அவர் பூஜ்யரனைவரிலும் மிகவும் பூஜிக்கத் தக்கவராகிறார். அங்ஙனம் இல்லாவிடில், அவரிலும் மேலானவர் எவர்தான் உளர்? (அம்பிகையும் திருமாலும் ஒன்றே! என்கிற கருத்துப்படி இங்கு பாதி உடலைக் கொண்டு மனைவித்தன்மை என்கிறார்)*

*(83)*

***ஜனன-ம்ருʼ2தி-யுதானாம் ஸேவயா தே3வதானாம்***
***ந ப4வதி ஸுʼக2 லேஸ1ஸ்ஸம்ஸ1யோ நாஸ்தி தத்ர***
***அஜனிமம்ருʼ2த ரூபம் ஸாம்ப3மீஸ1ம் ப4ஜந்தே***
***ய இஹ பரம ஸௌக்2யம் தே ஹி த4ன்யா லப4ந்தே।।***

*பிறப்பு இறப்புள்ள மற்ற தேவதைகளை ஆராதித்து லவலேசமும் சுகம் ஏற்படாது. இதில் ஐயமில்லை. எவர்கள், பிறப்பு, இறப்பு அற்ற வரும் பராசக்தியுடன் கூடிய வருமான ஈசனை இங்கு ஆராதிக்கின்றனரோ அவர்களே பிறவிப்பயனை எய்தியவர்கள், (பிறப்பிறப்பற்ற) பேரின்பத்தை (அவர்களே) பெறுகின்றனர்.*

*(84)*

***ஸி1வ தவ பரிசர்யா ஸன்னிதா4னாய கௌ3ர்யா***
***ப4வ மம கு3ண-து4ர்யாம் பு3த்3தி4-கன்யாம் ப்ரதா3ஸ்யே***
***ஸகல பு4வன ப3ந்தோ4 ஸச்சிதா3னந்த3 ஸிந்தோ4***
***ஸத3ய ஹ்ருʼ2த3ய-கே3ஹே ஸர்வதா3 ஸம்வஸ த்வம்।।***

*சிவனே! உலகை ஆக்கியவரே உலகமனைத்திற்கும் உறவினரே! ஸச்சிதானந்தக் கடலே! தயை நிறைந்தவரே! கௌரியுடன் கூடிய தங்களுக்குப் பணி செய்யவே எனது நற்குணங்களமைந்த புத்தி என்னும் கன்னிகையை தானம் செய்கிறேன். அவளை ஏற்று எனது ஹ்ருதயமென்ற வீட்டில் நித்ய வாஸம் செய்யுங்கள்.*

*(85)*

***ஜலதி4 மத2ன த3க்ஷோ நைவ பாதால பே4தீ3***
***ந ச வன ம்ருʼ2க3யாயாம் நைவ லுப்3த4: ப்ரவீண:***
***அஸ1ன குஸுʼம பூ4ஷா வஸ்த்ர முக்2யாம் ஸபர்யாம்***
***கத2ய கத2மஹம் தே கல்பயானீந்து3-மௌலே।।***

*பிறைசூடியே! நான் கடலைக் கடையியலாதவன், (ஆகவே உனது உணவான ஆலஹாலத்தையும், முடியணியான சந்திரனையும் தர இயலாதவன்,) பாதாளத்தைப் பிளக்க முடியாதவன் நான். ஆகவே, உன்*

ஆபரணமான அரவத்தை நாகலோகத்திலேயிருந்து கொண்டு வர வல்லேனல்லன். நான் காட்டு விலங்குகளை வேட்டையாடவும் வல்லவனான வேடனும் அல்லன். (ஆகவே, உனது உடைகளான யானைத் தோலையும், புலித்தோலையும் அளிக்க முடியாதவன். இங்ஙனமிருக்க, உனக்கு நைவேத்யம், புஷ்பம் (முடியணி) ஆபரணம், வஸ்திரம் இவற்றை அர்ப்பணிக்கும் பூஜையை நான் எங்ஙனம் செய்வேன்? சொல்.

*(86)*

***பூஜா-த்3ரவ்ய ஸம்ருத்3த்4யோ விரசிதா: பூஜாம் கத2ம் குர்மஹே***
***பக்ஷித்வம் ந ச வா கீடித்வமபி ந ப்ராப்தம் மயா து3ர்லப4ம்***
***ஜானே மஸ்தகமங்க்4ரி-பல்லவமுமா ஜானே ந தே=ஹம் விபோ4***
***ந ஞாதம் ஹி பிதாமஹேன ஹரிணா தத்த்வேன தத்3ரூபிணா ।।***

எங்கும் நிறைந்தவனே! உமை மணாளனே! யான் உனது பூஜைக்கு ஏற்ற பொருளை ஸம்ருத்தியாகச் சேகரித்தே னாயினும், பூஜை செய்வது எங்ஙனம்? ஏனெனில் என்னால் அன்னப்பறவைத் தன்மையோ, பன்றித் தன்மையோ அடையப் படவில்லை. இனி அடையவும் இயலாது. எனவே, உன் முடியையும், தளிரடியையும் நான் அறியவில்லை. அன்னம், பன்றி இவ்வுருவங்களைக் கொண்டும் பிரம்மாவினாலும், விஷ்ணுவினாலும் உம் திருவுருவம் அறியப்படவில்லையே! (உருவமே புலனாகாத போது எப்படி மூர்த்தி வழிபாடு செய்வது என்பது கருத்து).

*(87)*

***அஸ1னம் க3ரலம் ப2ணீ கலாபோ***
***வஸனம் சர்ம ச வாஹனம் மஹோக்ஷ:***
***மம தா3ஸ்யஸி கிம் கிமஸ்தி ஸ1ம்போ4***
***தவ பாதா3ம்பு3ஜ ப4க்திமேவ தே3ஹி।।***

சம்போ! உமக்கு உணவு விஷம், அணி பாம்பு, ஆடை தோல், வாஹனமோ காளை. (எனக்குக் கொடுக்க உம்மிடம்) யாது உளது? எனக்கு எதை அளிக்கப் போகிறீர்?

*(உம்மால் கொடுக்க கூடியவைதான்) ''நினது திருவடியில் பக்தி'' என்ற ஒன்றை கொடுப்பீராக!*

*(88)*

***யதா3 க்ரு2தாம்போ4-நிதி4 ஸேது-ப3ந்த4ன:***
***கரஸ்த2 லாத4: க்ரு2த பர்வதாதி4ப:***
***ப4வானி தே லங்கி4த பத்3ம-ஸம்ப4வ:***
***ததா3 ஸி1வார்சாஸ்தவ பா4வன-க்ஷம: ।।***

*சிவனே! (ராமலிங்கப் பிரதிஷ்டை செய்த ஸ்ரீ ராமனைப் போல்) கடலிலும் அணைகட்டும் திறன்வாய்ந்தவனாகவும், (அகஸ்தியரைப் போல விந்திய) மலையரசைத் தனது கைத்தலத்தால் அமுக்கும் திறமை வாய்ந்தவனாகவும், கமலத் துதித்த பிரம்மாவையும் தாண்டியவனாகவும் (பிறப்பைக் கடந்தவனாகவும்) நான் எப்போது ஆகிறேனோ, அப்பொழுதுதான் உம்மை அர்ச்சிக்கவும் தோத்தரிக்கவும் தியானிக்கவும் சக்தனாவேன்.*

*(89)*

***நதிபி4ர்நுதிபி4ஸ்த்வமீஸ1 பூஜா***
***விதி4பி4ர்த்4யான-ஸமாதி4பி4ர்ந துஷ்ட:***
***த4னுஷா முஸலேன சாஸ்1மபி4ர்வா***
***வத3 தே ப்ரீதி-கரம் ததா2 கரோமி।।***

*ஈசனே! வில், உலக்கை, கல் முதலியவற்றால் (அடித்த அர்ஜுனன், சாக்கிய நாயனார் ஆகியோரிடம்) நீர் பிரீதியடைவது போல், உம்மை வணங்குவதாலும், துதி செய்வதாலும், ஆராதிப்பதாலும் திருப்தியடைவதில்லை. எனவே, உமக்கு விருப்பமான வழிபாடு எது? என்று கூறுவீராக! அவ்விதமே செய்கிறேன்.*

*(90)*

***வசஸா சரிதம் வதா3மி***
***ஸ1ம்போ4ரஹம் உத்3யோக3 விதா4ஸு தே=ப்ரஸக்த:***
***மனஸாக்ரு2திமீஸ்1வரஸ்ய ஸேவே***
***ஸி1ரஸா சைவ ஸதா3ஸி1வம் நமாமி ।।***

*சம்போ! நான் உயர்வான யோக முறைகளில் ஈடுபட்டவனல்லன். வாக்கினால் உமது லீலைகளைச் சொல்கிறேன். மனத்தால் ஈச்வரனுடைய உருவத்தைத் தியானிக்கிறேன். தலையால் எக்காலும் ஸதாசிவத்தைப் பணிகிறேன். (இவ்விதம் முக்கரணங்களையும் உம்மிடத்தில் ஈடுபடுத்துகிறேன்.)*

# *இனிவரும் திருநாட்கள் - 2012*

| | | | |
|---|---|---|---|
| *பிப்ரவரி* | *1* | *புதன்* | *ரமண புராணம் அரங்கேற்ற நாள்* |
| *மார்ச்* | *12* | *திங்கள்* | *சுந்தரம் ஐயர் நாள்* |
| | *16* | *வெள்ளி* | *ஸ்ரீவித்யா ஹோமம்* |
| | *23* | *வெள்ளி* | *தெலுங்கு வருடப் பிறப்பு* |
| | *31* | *சனிக்கிழமை* | *ஸ்ரீராம நவமி* |
| *ஏப்ரல்* | *13* | *வெள்ளி* | *தமிழ் வருடப் பிறப்பு* |
| | *18* | *புதன்* | *பகவானது 62 வது ஆராதனை* |

# சிலந்தியாய் வரும் சிவனருள்

Dr. S. **ராமகிருஷ்ணன்**

*பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷி, உள்ளது நாற்பதில் முதல் மங்கல வெண்பாவில் ப்ரும்மத்தின் நிர்குண ஸ்வரூபத்தை உள்ள பொருள், உள்ள உணர்வு, உள்ளது எனும் சொற்களால் குறிப்பிட்டார். அந்த நிர்குணமான உள்ள பொருளே பக்தர்களின் பொருட்டு ஸகுணமாக, அதாவது பெயர் உருவங்களுடன் தோன்றும், மனம் அற்ற நிலையில் ப்ரும்மம் நிர்குணம், மனமுள்ள நிலையில் அதே ப்ரும்மம் மாயா சம்பந்தத்தால் ஸகுணமாகும். அப்போது அதுவே ஈசன் ஆகும்.*

***மாயாம் து பிரகிருதிம் விதியான்***
***மாயினம் து மஹேஸ்வரம்!***

***(ஸ்வேதாஸ்வதர உபநிஷத் - 4,10)***

*அந்த மஹேசனிடம் பக்தி, அதாவது அன்பு செய்வோர் அவனிடம் ஆத்ம சமர்ப்பணம் செய்வதால், அவனது பூர்ண அருளுக்கு உரியவராக, கேவல அத்வைத ஆத்மானுபவத்தையே அடைவார்கள். ஏனெனில் மேலான பக்தியே (பரா பக்தி), ஸ்வரஸ்ரூப அனுசந்தானம் அதாவது தன் ஆத்ம ஸ்வரூபத்தில் நிலைத்து நிற்பது என்று ஆதிசங்கர பகவத்பாதாள் சொல்கிறார்.*

***ஸ்வஸ்ரூப அனுஸந்தானம் பக்திரித்யபிதீயதே!***

***(விவேக சூடாமணி, 31)***

*ஸகுண பிரும்மமான மஹேசனிடம் சரண் அடைவதைத் தான் இரண்டாவது மங்கல வெண்பாவில் ஸ்ரீ ரமண பகவான் அருளிச் செய்கிறார்.*

***மரணபயம் மிக்குஉள அம்மக்கள் அரண் ஆக***
***மரணபவம் இல்லா மஹேசன் சரணமே***
***சார்வர்தம் சார்வோடு தாம் சாவுற்றார் சாவெண்ணம்***
***சார்வரோ சாவாதவர் நித்தர் – பார்வை சேர்!***

*இதன் பொருள் - மரண பயம் அதிகமாக உள்ள குணத்தை மனிதர்கள் இரண்டும் கடந்த மஹேசனை சரணமாக, அடைக்கலமாகப் புகுவர். அதனால் அவர்களின் அஹங்கார மமகாரங்கள் அற்றுப் போகும். சாகாத தன்மையுள்ள அவர்கள் பின்னும் மரணத்தைப் பற்றி எண்ணுவார்களோ?*


*எந்தப் பக்தன் சரணடைகிறானோ அவனைக் காப்பாற்றுவதில் ஈசன் மகிழ்ச்சியடைகிறான். யோ மத் பக்த: ஸ மே ப்ரிய: (பகவத் கீதை 12 14 16). யார் என் பக்தனோ அவனே எனக்கு பிரியமானவன். அஹம் ஸ்மராமி மத் பக்தம் நயாமி பரமாம் கதிம் (வராஹ புராணம்-வராஹ சரம சுலோகம்). என் பக்தனை நினைக்கிறேன், அவனுக்கு மேலான கதியை அளிக்கிறேன் என்கிறார் ஈசன். ஆகவே பக்தன் செய்ய வேண்டியதெல்லாம் சரணாகதியே.*

*சரணாகதி என்றாலே விபீஷணனுடைய சரணாகதி தான் முதற்கண் ஞாபகத்திற்கு வருகிறது. ஏனெனில், சரணாகதிக்கான 6 தகுதிகளையும் அவனே முழுமையாகக் கொண்டிருக்கிறான்.*

*அந்த ஆறு தகுதிகள் பின் வருமாறு -*

*1. ஆனுகூல்யஸ்ய சங்கல்பம்*

*(அனுகூலமே கிட்டும் என்ற நல்லெண்ணம்)*



*2. பிராதி கூலஸ்ய வர்ஜனம்*

*(தோல்வியைப்பற்றிய எண்ணங்களைவிட்டொழித்தல்)*

*3. ரக்ஷிஷ்யதி இதி விஸ்வாஸோ*

*(காத்தருள்வான் எனும் முழு விஸ்வாஸம்)*

*4. கோப்த்ருத்வ வரணம்*

*(நீயே கதி, வேறு புகலிடம் இல்லை எனும் பிரார்த்தனை)*

*5. ஆத்ம நிக்ஷேபம்*

*(தன்னை - உடல், உயிர், உள்ளுணர்வைப் பூர்ணமாகக் கடவுளுக்கு அர்ப்பணித்தல் - ஆத்ம சமர்ப்பணம்)*

*6. கார்ப்பண்யம்*

*(கடவுளிடம் அளிக்கத் தன்னிடம் ஒன்றுமே இல்லை என்ற கஞ்சத்தனத்தை (கிருபணத்தன்மை)யை ஒப்புக் கொள்ளுதல்.)*

*(ஷட்விதா சரணாகதி, வால்மீகி ராமாயணம், யுத்தகாண்டம் 6,19 கோவிந்த ராஜீயம்)*

*இங்ஙனம் சரணாகதி செய்த விபீஷணன், விபீஷணாழ்வாராகி விட்டார். ஸ்ரீராமபிரான், விபீஷணாழ் வாருக்கு அருளியதென்ன? லங்காதிபதிப் பதவி மட்டு மல்ல, தன் குலதனமான ஸ்ரீரங்கநாதனையே கொடுத்தல், பரம பாகவதரான விபீஷணனை நினைத்தல் (விபீஷணாதீன் புண்யான் இமான் பரம பாகவதாம் ஸ்மராமி), ஸ்ரீரங்கநாதன், ஸ்ரீரங்கத்தில், மேற்கே தலைவைத்துத் தெற்கே பார்த்துக் கொண்டிருப்பது (மற்ற சயனப் பெருமாள் - தெய்வங்கள் தெற்கே தலைவைத்து கிழக்கே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்) அனவரதமும் தெற்கே இலங்கையிலுள்ள தன் பக்தனைப் பார்த்து மகிழவே.*

*மஹாபலிச் சக்ரவர்த்தி, தன்னையே, வாமனராக வந்த ஸ்ரீமந்நாராயணனுக்குக் கொடுத்தான். பதம் த்ருதீயம் குரு சீர்ஷ்ணி மே நிஜம் (ஸ்ரீ மத் பாகவதம் - 8.22.2).*

*இதன் பொருள் - உமது மூன்றாவது அடியை என் தலையில் வைக்கவும்). பதிலாக, உலகளந்த பெருமாள் சுதலத்தை அவனுக்குக் கொடுத்து அல்லாமல் தன்னையே கொடுத்து, பரிச்சக்ரவர்த்தி மாளிகை முன்பு அன்றும், இன்றும், என்றும் வாயிற்காப்பாளனாகப் பணிபுரிகிறார்.*

***ரக்ஷிஷ்யே ஸர்வதோஹம் த்வாம்***
***ஸாநுகம் ஸபரிச்சதம்***
***ஸதா ஸந்நிஹிதம் வீர***
***தத்ர மாம் த்ரக்ஷ்யதே பவான்***

***(ஸ்ரீ மத் பாகவதம் 8.22.35)***

***பகவான் ஸ்வயம் அகில ஜகத்குரு:***
***நாராயண: த்வாரே கதாபாணி: அவதிஷ்டதே***
***(ஸ்ரீ மத் பாகவதம் 5.24.27)***

*எக்காலத்திலும் உன்னையும் உன் உற்றார் உறவினரையும், உன் உடைமைகளையும் காப்பேன். வீரனே! எப்போதும் உன் முன்னிலையில் உன் கட்டளைகளை ஆற்றத் தயாராக இருப்பேன்! என்கிறார். ஜகத்குருவான பகவான் ஸ்ரீ மந் நாராயணன், மாளிகை வாயிலில் கதையைக் கையில் வைத்துக் கொண்டு நின்றார். அதாவது நாம் நம்மைக் கொடுத்தால், கடவுள் தன்னையே நமக்குக் கொடுப்பதாக அறிகிறோம்.*

*பால் ப்ரண்டன், ஸ்ரீ ரமண பகவானிடம் சரணாகதியைப் பற்றிச் சொல்லும் போது* "I have given up all my possessions" *என்றாராம். உடன் மஹரிஷி சிரித்துக் கொண்டே* "and the possessor too" *என்று பூர்த்தி செய்தாராம்.*

*சரணாகதியை, மார்ஜாரகிசோர நியாய வழி என்றும், பிரபத்தி என்றும் கூறுவர். மார்ஜாரகிசோரம் என்றால் பூனைக்குட்டி. பூனைக்குட்டி அணுவளவு முயற்சி கூடச் செய்யாது. இருந்த இடத்தினின்று வேறு இடத்திற்கு மாற்றவோ, வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யவோ கூட தாய்ப்பூனை தான் செய்யும். அது போலவே, பகவான் சரணாகதி செய்த பக்தனை அவன் விரும்பிய இலக்கிற்குக் கூட்டிச் செல்கிறார். இதில் பக்தனுடைய முயற்சி தேவையில்லை. நீயே கதி என்று செயலற்றுக் கிடப்பது தான் மார்ஜாரகிசோர நியாயம். வைணவத்தில் இம்முறையை பிள்ளை லோகாச்சாரியார் மணவாள மா முனிகள், அவர்கள் வழி வந்தவர்கள் பக்தியுடன் கைக் கொண்டார்கள்.*

*இம்மார்ஜாரகிசோர நியாயத்தை, மரணபவம் இல்லா மஹேசனை சரணடைய விரும்புவோர்கள் கடைப்*

பிடித்தால் போதும். ஒன்றுமே செய்யாமல் நீயே கதி என்று கிடந்து விட்டால் மட்டும் போதுமா? என்ற கேள்விகள் உதிக்கின்றன. ஸ்ரீரமண மஹரிஷியின் வாழ்க்கை வரலாறு, அவரது அக்ஷரமணமாலை, உள்ளது நாற்பது இவற்றை ஆராய்ந்தால், மார்ஜாரகிசோர வழி முழுதும் பொருத்தமான வழியாகத் தென்படவில்லை. காரணம் அதில் முக்கியமான இரண்டு அம்சங்கள் இல்லை. அவை (1) சிறிதளவு கூட பக்தனின் முயற்சியின்மை (2) தாயும் குட்டியும் இரண்டுமே தனித்தனி பிராணிகளாக, செயல்படும் போது இருப்பதால் அத்வைதம், அதாவது இரண்டற்ற நிலை இல்லை. இவ்விரண்டும் ஸ்ரீரமணரின் ஸந்தேசத்தில் தேவையாகக் காணப்படுகின்றன. ஓர் புது நியாயம் உருவாகிறது. அது எப்படி? என்று பார்ப்போம்.

### சிறு முயற்சியின் அவசியம்

ஆத்ம சமர்ப்பணம் பண்ணு முன், பக்தன் ஒரு சிறு முயற்சியுடன் ஆன்மீக யாத்திரை தொடங்க வேண்டும். தொடங்கிய பின் பூனைக்குட்டியைப் போல் நின் இட்டம் என் இட்டம் என்று சலனமற்று இருந்து விடலாம். மின்சார விளக்கைப் போட்டால் விளக்குகள் பிரகாசித்து ஒளியைக் கொடுக்கும். சுவிட்சையாவது போட வேண்டாமா? ஒருவனது வண்டிச் சக்கரம், சகதியில் மாட்டிக் கொண்டு விட்டது. தள்ளி நின்று கொண்டு, பகவானே வண்டி நகரப் பிரார்த்திக்கிறேன் என்றானாம். பகவான் வரவில்லை. ஓர் சாதுவின் உபதேசத்தால் தன் தோளைச் சக்கரத்தில் கொடுத்து சிறு முயற்சி செய்து தூக்க முயற்சித்தவுடன், கடவுள் கை கொடுத்து விட்டார். வண்டி நகர்ந்தது. நீரில் மூழ்கி உயிருக்குப் போராடும் ஒருவன் கைகளையாவது உயரத் தூக்க வேண்டாமா?

ஸ்ரீரமண பகவான் வாழ்க்கையை எடுத்துக் கொண்டால் நான் யார் விசாரம் மூலம் ஆத்மானுபவம் ஏற்பட்ட பின்பும்,

*மதுரையினின்று சிறுமுயற்சி செய்து திருவண்ணாமலை வந்தார். அண்ணாமலையானை அப்பா என்று கட்டிக் கொண்டதில்பூரணத்வம்அடைந்து, பழுத்த ஞானப்பழமாகத் திகழ்ந்தார். மதுரையிலேயே இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்?*

*விபீஷணனும் இலங்கையிலேயே தங்கி சரணாகதி செய்யவில்லை. இலங்கையை விட்டு வெளியேறி ராமேஸ்வரம் கடற்கரையில் சுக்ரீவாதிகளுடனும், ஹனுமாருடனும் தங்கியிருக்கும் ஸ்ரீராமரைச் சரணடைகிறான். - இதுவே விபீஷணனின் சிறு முயற்சி. பலன் - அமோகம்! அமோகம்! அமோகம்! (அமோகாஸ்தே பவிஷ்யநிதி பக்திமன்தோ நரா புவி - வால்மீகி ராமாயணம் யுத்தகாண்டம் 118-30) . ஸ்ரீ மத் பாகவதத்தில் அஜாமிளன் கூட நாராயணா! என்று பிள்ளையைக் கூப்பிட்டதால் மட்டும் முக்தி பெறவில்லை, கிடைத்தது விஷ்ணுபாரஷதர்களின் ஸத்ஸங்கம்தான். பிறகு முயற்சி செய்த பின் தான் மோக்ஷம் கிட்டியது.*

வளரும்....

# நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை

*பகுதி -11*

Dr. A. V. *ராஜகோபாலன்*

*பிரம்ம சூத்ரம், எந்தக் கருத்தையும் மிகச் சுருக்கமான வாக்கியங்களில் கூறும் ஓர் ஒப்பற்ற நூல். இதில் பல சூத்திரங்கள் இரண்டு அல்லது மூன்று வார்த்தைகளுக்கு உள்ளேயே அடங்கிவிடும். இதில் சாதகர்களின் சித்தப் போக்கிற்கு ஏற்ப பொருள் கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. இக்காரணம் பற்றியே சகுண, நிர்க்குண உபாசனைகளுக்கு இங்கு இடம் இருக்கிறது. அத்வைத, த்வைத கருத்துக்கள் இரண்டுமே இதற்கு ஏற்புடையவனாக அமைகின்றன. இதன் காரணம் என்ன?*

*பிரம்மத்தை அடைவதே சாதகனின் நோக்கம். இது சற்று கடினமான பாதைதான். பிரம்மம் எத்தன்மையது உலகின் மிகப் புராதானமான நூலாகிய ரிக் வேதத்தில் அமைந்து உள்ள புருஷ சூக்தம். பரம்பொருளை ஸ்வரூப மூர்த்தியாக வருணிக்க ஆரம்பித்து*

***ஏதாவானஸ் ய மகிமா***

*எனச் சொல்கிறது.*

*இவையே அந்தப் பரம்பொருளின் மகிமை என்று சொல்லித் தலைகட்டிப் பார்க்க விழைகிறது இந்த சூக்தம்.*

ஆனால் பிரம்மத்தைச் சில சொற்களில் அடக்க இயலுமா, ஆகையால் இச்சொற்சொடரையே சற்று மாற்றி,

**ஏதாவானஸ் ய மகிமா?**

(இவைதான் பரத்தின் மகிமையா) என்று ஒரு வினாவாகக் கொண்டால், இந்தச் சூத்திரத்தின் அடுத்த வரியின் பொருள் விளங்கும்.

**அதோ ஜ்யாயாகுஸ் ச பூருஷ:**

(இதற்கு மேலும் பல குணங்கள் உள) இறைவனின் தத்துவம் வருணனைக்கு அப்பாற்பட்டது என்கிறது வேதம். சாதாரண அறிவினால் அடைய முடியாதது பரம்பொருள். யதோ வா சோ நிவர்தன்தே அப்ராப்ய மனசா சஹ (அதை அடைய முடியாமல் வாக்கும் மனமும் பின்னடைகின்றன) என்ற தத்துவ விளக்கம் இக்கருத்தை வலியுறுத்துகிறது.

அப்படியானால் சாமானியர்கள் என்ன செய்ய இயலும். இம்முயற்சியை கைவிட்டு விடலாமா? என்ற ஐயப்பாடு எழுகிறது. இதற்கு பிரம்ம சூத்ரம் என்ற ஒப்பற்ற ஆதாரத்தில் ரமண மலர்களை அர்ச்சித்து தெளிவுபட முயலுவோம்.

**பிரம்மத்தின் இயல்பு:**

பல இடங்களில் பிரம்மசூத்திரத்தில் பரம்பொருளின் வர்ணனை இடம் பெறுகிறது. சில அமுதத் துளிகளைப் பார்ப்போம்.

1. பிரம்மம் எல்லா வலிமையும் பொருந்தியது. இது சுருதியின் கருத்து. இதை பிரம்ம சூத்திரம் விளக்குகிறது.

**ஸர்வோபேதா ச தத்தரசனாத் (11.1.30)**

2. பிரம்மம் உலகப் படைப்பை ஒரு விளையாட்டாகக் கொள்கிறது.

**லோகவித்து லீலா கைவல்யம் (11.1.33)**

*3. பாராபட்சம் அற்று, பிரம்மம் செயல் படுகிறது. எல்லாம் அவரவர் பாவ, புண்ணியத்திற்கு ஏற்ப அமைகிறது.*

***வைஷம்ய நைர் க்தருண்யே ந,***
***ஸாபேக்ஷ்வாத் ததா ஹி தர்சயதி***
***(11.1.34)***

*பிரம்மம் என்பது ஒரு அற்புதமான அமைப்பு. அதை* Cosmic system *என்று கூறலாம். அதை சங்கரர் நீர்க்குள் பிரம்மமாகவே பார்க்கிறார். பெரும்பாலும் உபநிஷத்து களும் இத்தகைய கருத்தையே ஏற்கின்றன.*

*கடோபநிஷதமும் இந்த நிலையை ஏற்றுக் கொள்கிறது. பிரம்மத்தை இந்த உபநிஷதம், (1) அசப்தம் (2) ஆஸ்பரசம் (3) அசரூபம் (அவ்யயம்) ததா (5) அரசம் (111.15) விளக்குகிறது. தொடமுடியாதது, உருவமற்றது, சொல்லிற்கு எட்டாதது, தெளிவுபட உணர முடியாதது, சுவையற்றது என்பவை பிரம்மத்தின் இயல்புகள். இது நேதி நியாயம் என்று கூறப்படும். இத்தகைய குணங்கள் இல்லை இல்லை என்று விளக்கும். இந்த முறைபாடு இந்திய வேதாந்தத்திற்கு மிகவும் ஏற்றது. அத்வைத சித்தாந்தத்திற்கு ஏற்புடைய நியதி இதுவே. நாம-ரூப-குண எல்லகளுக்குள். பரம்பொருளை சுருக்க இயலாது என்பது இதன் முடிவு.*

*வசிஷ்டாத்வைத மதத்தின் தலைசிறந்த ஆசான் ஸ்ரீ ராமானுஜர். அவர் பிரம்ம சூத்திரத்திற்கு ஸ்ரீ பாஷ்யம் என்ற சிறந்த உரையை எழுதி அருளியுள்ளார். அதில் அவர் சகுண உபாசனையை அடிக் கோடிட்டு வற்புறுத்துகிறார். இதற்குப் பல இடங்களில் ஒப்புதல் காணப் படுகிறது.*

***கதே அர்தத்வம் உபயதா***
***அன்யதா ஹீ விரோத:***
***(பிரம்ம சூத்ரம் 111.3.29)***

*சகுண பிரம்மத்தை அறிதலே ஏற்றம். அதுவே மரணத்திற்குப் பின் தேவ வழியில் அழைத்துச் செல்லும். நிர்குண உபாசனை இவ்வழியில் அழைத்துச் செல்ல*

இயலாது. இது தெளிவுபட, சகுண உபாசனையின் மூலம்தான் பிரம்மத்தை அடைய இயலும் என்று கூறுகிறது.

குழப்பம்! முன்பு கண்ட பிரம்மத்தின் விளக்கமும், இந்த உபதேசமும் வெவ்வேறு திசைகளில் செல்வது போன்ற தோற்றம் காணப்படுகிறது. என்ன செய்வது? கவலை வேண்டாம்! பிரம்ம சூத்ரத்தின் பூர்வமாகக் கிடைக்க ஒரு சிறந்த வழி ரமண மஹரிஷியின் வாக்குகளில் நமக்கு காணக் கிடைக்கிறது.

**உபதேச உந்தியார்:**

பகவான் அருளிச் செய்த நூல்கள் சிலவே. அவற்றுள் ஒரே சமயத்தில் அமைக்கப்பட்ட சிறந்த நூல் இது. ஸ்ரீ முருகனாரின் வேண்டுகோளுக்கு இரங்கி பகவான் உந்தி பறத்தல் என்ற தமிழ் முறைப்படி அமைந்த நூல். பொதுவான பெண்கள் விளையாட்டு முறையான இந்த பாடல் முறை எளிதானது. சித்தாந்தத்தைச் சுருக்கமாகச் சொல்ல வல்லது. இதன் முதற்பாசுரம் கர்மங்களின் பயனாக இறைவன் தக்க பலனை அளிக்கிறார் என்று கூறுகிறது.

**கன்மம் பயின்றால் கர்த்தன தாணையால்**
**கன்மம் கடவுளோ உந்தீபற**
**கன்மம் சடமதால் உந்தீபற**
**(உபதேசவுந்தியார்-1)**

சில கர்மங்கள் நற்பயனையும், வேறு சில துன்பத்தையும் தருமாறு அமைகின்றன. பிரம்ம சூத்ரம் (11.1.34) கோட்பாட்டிற்கு ஏற்ப அமைந்துள்ளது.

ஆனால் இக்கருமங்கள் மீண்டும் மீண்டும் சம்சாரத்தில் தள்ளக் கூடியவையாதனால் பிரம்மத்தை விரும்புவோன், இதனால் பெறுவது ஒன்றுமில்லை. இதையே ரமண பகவான்

***வினைக்கடல் வீழ்ந்திடும் உந்தீபற***
***வீடுதரல் இலை உந்தீபற***
***(உபதேசவுந்தியார் - 2)***

*என்பர்.*

*வீடு தரல் இலை - மோட்சம் வினைப்பயனால் கிடைக்காது என்று ஆணித்தரமாக உரைக்கிறார். இதையே பகவத் கீதையும் ஒன்பதாவது அத்தியாயத்தில் விளக்குகிறது.*

***தேதம் புக்த்வா ஸ்வர்க வோகம் விசாலம்***
***க்ஷீணோ புண்யே மர்திய லோகம் விசந்தி***

*வினைப்பயனாக சுவர்க்கத்தை அடைந்து, அங்கு மகிழ்வுடன் வாழ்ந்து, புண்ணியங்களின் பலன் முடிந்தவுடன், மறுபடியும் இவ்வுலகையே அடைகின்றன என்பது கண்ணன் காட்டும் வழி. இதன் விளக்கமாக, பலனில் கருத்தின்றி நிஷ்காம்ய கருமமாக செய்யப்படும் வினை மோட்ச சாதனம் என்பது ரமண மார்க்கம்.*

***கருத்தனுக்கு ஆக்கும், நிட்காமிய கன்மம்***
***கருத்தை திருத்தியஃது - உந்தீபற***
***கதிவழி காண்பிக்கும் உந்தீபற***
***(உபதேசவுந்தியார் - 3)***

*நிஷ்காம்ய கருமம் இரண்டு குணங்களை உடையது.*

*1) கருத்தனுக்கு ஆக்கும் - இறைவன் பொருட்டு செய்யப்படுவது.*

*2) கதி வழி காண்பிக்கும் - வீடு பெற வழிகாட்டும்.*

*மேலும் இந்தப்பாடல் இரண்டு வித யோகங்களின் கூட்டமைப்பாக இருப்பதையும் காண்கின்றோம். இறைவன் பொருட்டுச் செய்யப்படும் செயல்கள் பக்தி மார்க்கத்தையும், நிஷ்காம்ய கருமம், கர்ம மார்கத்தையும் குறிக்கும். ஏன், கருத்தைத் திருத்தியது என்ற இப்பாடலின் சொற்கள் மாசு நீங்கி மனத்தைக் குறிப்பிட, அதுவே ஞான மார்க்கமாக ஒளிர்கிறது.*

இப்பாடல் ஆழமான பொருள் உடையது. பக்தி-கர்ம-ஞான மார்க்கங்களுக்கு ஒரு சிறந்த பாலம், பிரம்ம சூத்ரத்திற்கு புரியக் கூடிய விளக்கம்.

பிரம்ம சூத்திரம், புரியாத, எட்ட முடியாத வேதாந்த மார்க்கத்தை மட்டுமே காட்டுகிறது என்று எண்ணும் மாந்தருக்கு, ரமணர் உபதேசவுந்தியார் மூலம் எளிய தமிழில் ஒரு சுலபமான வழிகாட்டுகிறார். இத்தகைய பிரம்மம் எங்கோ வானுலகில் அமைந்திருக்வில்லை. நம்மைச் சுற்றியுள்ள இந்த அற்புதப் படைப்புகள் யாவும் பிரம்மம். நாம் செய்யும் பூசையும் அதை ஏற்கும் இறைவனும் வழிபாடு செய்யும் நாமும் எல்லாமே அந்தப் பரம்பொருளின் அம்சமே. இதை மேற்கொண்டு பகவான் விளக்குவார்.

***எண்ணுருயாவும் இறை உருவம் என***
***எண்ணி வழிபடல் உந்தீபற***
***ஈசனற் பூசனை உந்தீபற***
***(உபதேச உந்தியார் 5)***

எட்டு உருவங்களின் கூட்டமைப்பே அஷ்டமூர்த்திகள் என அழைக்கப் படுகின்றன. இவை பிரபஞ்சசக்திகள். ஐந்து சக்திகளாகிய ஆகாயம், மண், நெருப்பு, காற்று, நீர் ஆகியவை இந்த எட்டில் அடங்கும். சந்திரனும், சூரியனும் இவற்றின் இடையே இயங்கும் இந்த ஜீவனும் எண்ணுரு என்ற இந்தத் தத்துவத்தின் அம்சங்கள். இவையாவுமே இறை உருவாய் எண்ணி வழிபடல் ஈசனற் பூசை என்பார் ரமணர். இயற்கையின் புனித நிழலில் வாழும் நாம் இச்சத்திகளுக்கு இசைந்து இறையுருவை நம் உள்ளத்தே அமைத்தல் சிறந்த ஆகமப் பயிற்சி. அதுவே யோக நிலை.

பகவானின் இந்தப் பாடல் பெரும் தத்துவ விளக்கமாகும். பிரம்மத்தை எட்டு வகைச் சக்திகளாக காளிதாசனும் காண்கிறான்.

***யை ஸ்ருஷ்டி: ஸ்ரஷ்டுராத்யா வஹதி விதிஹுதம்***
***யா ஹவிர் யா ச ஹோத்ரி***

***யே த்வே காலம் விதத்த: ஸ்ருதி விஷய குணா***
***யா ஸ்திதா வ்யாப்ய விஸ்வம்।***
***யாமா ஹு: ஸர்வபீஜ ப்ரகிருதி இத் யயா***
***ப்ராணின: ப்ராண வந்த:***
***ப்ரத்யக்ஷாபி: ப்ரபன்னம்: தனுபிரவது வஸ்தாபி:***
***அஷ்டாபிரிச:।।***

*இது அபிஞான சாகுந்தலம் என்ற உயரிய நாடகத்தின் இறைவணக்கப் பாடல்.*

*நவரசங்கள் மூலம் மக்களைக் கவரும் விதம் அமைக்கப் பெறும் கேளிக்கை அம்சம் நாடகமாகும். அதில் சீரிய வேதாந்தக் கருத்துகளைச் சொல்வது காளிதாசன் போன்ற கவிகளாலேயே இயலும்.*

*நம்மிடையே உறங்கும் ஆத்மா, ஒரு தனிப்பட்ட, முக்கியமில்லாத சாதாரணன் இல்லை. இந்தப் பிரபஞ்சத்தின் உருவெளித் தோற்றமே அது. இந்த உடலைத் தாங்கும் ஜீவனுக்கு அவன் வாழும் பிரபஞ்சத்தை விளக்கிக் காட்டும் நூலே பிரம்ம சூத்ரம். இதற்கு சங்கரரும், ராமானுஜரும் இரண்டு ராஜ பாட்டைகள் போட்டு வழிகாட்டினார்கள். இரண்டுமே ஏற்புடையவை. இவை இரண்டையும் இணைக்கும் பாலமாக ரமணர் விளக்கங்கள் அமைகின்றன. உபதேசவுந்தியார் என்பது இந்திய வேதாந்த தத்துவத்தின் ஒளிமயமான விளக்கம். எளிய தமிழில் சாதாரண வார்த்தைகளில் இயற்றப்பட்ட விளக்கம். பரம் பொருளுக்கு நம்மை அழைத்துச் செல்லும் - சோபானம் - (படிக்கட்டு).*

*ரமணர் பாதையில் மேலும் சம்சரிப்போம்!*

# ரிபு கீதை

## தியாகராஜன்

அத்வைத சொரூபத்தில் அபேத நிஷ்டை உரைக்கும் 26வது அத்தியாயத்தை மீண்டும் மீண்டும் பாராயணம் செய்தால் அது நம்மை சமாதி நிலைக்குக் கொண்டு செல்லும் என்று ஸ்ரீ பகவான் அருளியுள்ளார்.

அந்த அத்தியாயத்தின் பாடல்களை, ஸ்ரீ பகவான் அவ்வப்போது, அவை தொடர்பாக அருளியுள்ள விளக்கங்களோடு, பக்தர்களுக்காக சமர்ப்பிக்கின்றோம்.

*(ரிபு கீதை - 26-3)*

***வெகு விதமாய்த் தோன்றியிடும் பேதமெல்லாம்***
***விசாரிக்கி லொருகாலு மிலவே யில்லை***
***யகிலமுமே யான்மாவுக் கபின்ன மான***
***வகண்டாபரப் பிரமமென்று மதுநா னென்றுந்***
***தகமைமிகுந் திடமான நிச்சயத்தைத்***
***தப்பாமலே யிகந்து பரப் பிரமத் தொன்றாய்ச்***
***சந்ததமுஞ் தன்மயமாய்ச் சகித்திருப்பாய்***

***(ரிபு கீதை - 26-4)***

***விதம் விதமாய் விளக்கிய வத்துவத மெல்லாம்***
***விசாரிக்கி லெதனிடையி லிலாத தாகுஞ்***
***திதமருவாக் காரிய காரணங்க ளெலாமாஞ்***
***திலமளவு மெதனிடையி லிலாத தாகு***
***மெதனிடையின் மனதுகலந் திருக்குங் காலை***
***யித்துவித பயமணவு மிலாத தாகு***
***மதன் மயமாய்த் துவிதபய மனுவு மின்றி***
***யசஞ்சலமா யநவரதஞ் சுகித்திருப்பாய்***

***(வசனாம்ருதம் பாகம் 2-57)***

கே - த்வைதமென்பது எது அத்வைதம் எது?

*ஸ்ரீ பகவான் - தேகாத்ம புத்தியை துவைதம், அஃதறலே அத்வைதம்!*

*(வசனாம்ருதம் பாகம் 1-41)*

*கே -தேகான்ம புத்தியை ஒழிப்பதெப்படி?*

*ஸ்ரீ பகவான் - விழிப்பிலும் கனவிலும் உடல் மனங்களுடன் சம்பந்தித்திருக்கும் நாம் தூக்கத்தில் அவற்றின் சேர்க்கை அற்று இருக்கிறோம். அதனால் அவை நமது இயல்பு அல்ல. அவற்றின் தொடர்பு அற்று இருப்பதே, நமது இயல்பு என்னும் உண்மையை விழிப்பு நிலையிலேயே உள்ளாழ்ந்து உணர வேண்டும். அத்தகைய பிற தொடர்பற்ற நான் இரு நிலைமைகள் அல்லது இரு எணணங்களின் இடையில் உணர்வதற்கு உரியதாம். ஒன்றைப் பற்றிக் கொண்டு முந்தியதன் பிடியை விடும் புழுப் போன்றது அகந்தை. அதனால் மிக நுண்ணிய அவ்விடைக் காலத்தில் அதன் மூலமாம் ஆன்ம ஸ்வரூபத்தை உணரலாம். அவ்வியல்பை உணரின் அந்நிலையிலேயே மனத்தை நிறுத்தி நிறுத்தி, பிற வாசனைகளை நீக்கி நமது இயல்பில் நிலை பெறலாம்.*

*நான் என்னும் அகந்தை ஆன்மாவினின்று எழுவதே ஆகும். எழுந்ததும் அது தன்னை உடலுடனும் வெளி விஷயங்களுடனும் சம்பந்தப் படுத்திக் கொள்கிறது. அது தான் அஞ்ஞானம், தேகாத்ம புத்தி, விஷயப் பற்றுதல் என்பன யாவும். அவ்வாறு தேகத்தோடு தன்னை சம்பந்தப்படுத்திக் கொள்ளாது நிறுத்தினால் அது தன் மூலஸ்வரூபத்தோடு ஒன்றி நிற்கும். அதுவே ஞானம்.*

*(வசனாம்ருதம், பாகம் 1-69)*

*தானாம் ஆத்மாவைத் தேகத்தோடு சம்பந்தம் உற்றதாகத் தோற்றுவிப்பதே மனம். அவ்விடத்தே பொய்யாம் அகந்தை ஒன்று முளைத்து, வேறு பல தோற்றங்களையும்*

*தோற்றுவிக்கிறது. இவையாவும் யதார்த்தம் அல்ல, ஆத்மாவே யதார்த்தமாயுள்ளது. அகந்தைப் பொய்த் தோற்றமொழிந்தால், உள்ளது தானே விளங்குகிறது. அது எப்போதும் எல்லோரிடமும் விளங்கிக் கொண்டிருப்பதே, புதிதாய்த் தோன்றுவதல்ல. தான் இருப்பதாக உணராதவர் யார்? எத்தோற்றமும் அற்றுத் தானே தானாய் விளங்குவது அது. அகந்தையோ விஷயங்களோடு சேர்ந்தோ தோன்றும். நான் எனக் கிளம்புவதும் அத்தோற்றங்களில் ஒன்றே, தானே தனக்கு விஷயமாவது அது. தோன்றுவதெல்லாம் பொய். அவற்றின் சாக்ஷி சைதன்யமாய்த் தோன்றாமல் என்றும் இருப்பதே மெய். தேகாதிதத்தைத் தோற்றுவிப்பதே அகந்தை. அகந்தையினின்று உலகத் தோற்றமும் எல்லா விவகாரங்களும் உபத்திரவங்களும் விளைகின்றன. குணங்குறிகளுடன் தோன்றும் எதுவும் நாமல்ல, பொய்த் தோற்றங்களுடன் சம்பந்தப் படாது நின்றால், ஸத்ய ஸ்வரூபம் தானே துலங்கும்.*

*(வச - 1-71)*

*ஸ்ரீ பகவான் - தனதியலேயாகிய நான் என்னும் ஆத்மா இதுவாகவோ, அதுவாகவோ இருப்பதன்று. கேவல ஸன்மாத்திரமே நான். இருப்பே நாம்.*

*அஞ்ஞானமென்று யாதொன்றுமில்லை. இது பிரியவில்லையெனில், அவ்வறியாமை யாருக்கென்று பார்க்க வேண்டும் தூக்கத்தினின்று விழிக்கும் போதே, அகந்தை தோன்றுகிறது. நான் இப்போது தூங்கிக் கொண்டிருக்கின்றேன், இனி விழிக்கப் போகிறேன் அல்லது வெகு நேரம் தூங்கிக் கொண்டே இருக்கின்றேன் என்றெல்லாம் தூக்கத்தின் போது நமக்குத் தோன்றுவதில்லை. விழித்த பிறகே நன்றாய்த் தூங்கினேன் என்று நினைக்கிறோம், சொல்கிறோம். விழித்துக் கொண்டதாக நாம் நினைக்கும் போது தூங்கிக்*

கொண்டுதான் இருக்கிறோம். அத்தூக்கம் தெளிய, கேவல ஸன்மாத்திரமாம் நம்மை நாம் உணர வேண்டும். உடம்போடு உணர்வைக் கலக்க வேண்டாம். உடலென்பது வெறும் நினைப்புப் பிண்டமே. ஞான நிலையில், எந்த நினைப்பு வந்தாலும் போனாலும் அது நம்மைச் சற்றும் தொடராது. தூங்கும் போது உடலென்றோ, உலகென்றோ எந்நினைப்புமில்லை, கவலையுமில்லை. அப்படியே இப்போதும், எப்போதும் இருக்கலாமே!

*(வச - 1-71)*

கே - ஸாதனையில் த்வைதம், (அதன் பூர்த்தியாகிய) சாத்தியத்தில் அத்வைதமென்று ஏதோ உள்ளது நாற்பது அநுபந்தப் பாடல் ஒன்றில் சொல்லப்பட்டிருக்கிறதே, அதன் விஷயமென்ன?

ஸ்ரீ பகவான் - தேடுங்காலத்தும், அடைந்ததாகச் சொல்லப்படுங் காலத்தும் இருப்பது ஏகாத்மாவே. ஆதலால் சாதனையைத் தொடங்கும் போது துவைதானுபவம் என்றும், அது முடிந்த இடத்தில் அத்வைத்மென்றும் சிலர் கூறுவது பொருத்தமல்ல என்பதே அப்பாட்டின் விஷயம்.

ஜீவன் கடவுளைத் தியானித்து வழிபட்டு முடிவில் அவனிடம் லயிக்கிறானென்று சிலரும், கடவுளும் ஜீவனும் என்றும் வேறு வேறேதான்! என்று சிலரும் சொல்வர். முடிவில் எப்படியோ, அதைப் பற்றி இப்போது கவலைப்படுவதேன்! நாம் இருப்பது நிச்சயம், அதைப்பற்றி யாருக்கும் சந்தேகமில்லை. நான் யாரென்பதை முதலிற் கவனிப்போம். அதன் பிறகு, கடவுளோடு நாம் ஒன்றியிருக்கிறோமா, அம்சமாயிருக்கி றோமா அல்லது வெவ்வேறாகவே இருக்கிறோமா? என்பதைப் பார்க்கலாம். அப்போது அது தானே தெரியும். அதற்கு முன் அந்நிலையைப் பற்றி நாம் நிச்சயிப்பது

புத்தியினாலும், யுக்தியினாலுமே. புத்தி அந்தராத்மா விடமிருந்து ஏகதேசப் பிரகாசம் பெறுவது. அச்சி ற்றறிவைக் கொண்டு அகண்ட போதத்தை எப்படி அறிய முடியும்?

*(வச - 1-116)*

கே - மூர்த்தி, மந்திரம் முதலிய ஏதாவதொன்றில் மனத்தை ஏகாக்கிரமாக்குவதே நன்மை பயக்குமென்றும், மனோ நாசத்தில் தீவிரமாய் ஈடுபடல் ஆபத்திற் கொண்டு போய் விடுமென்றும் சிலர் சொல்கிறார்களே?

ஸ்ரீ பகவான் - யாருக்கு ஆபத்து உண்டாகும்? ஆபத்தோ, சம்பத்தோ ஆத்மாவுக்கு அன்னியமாய் வேறெதுதான் இருக்க முடியும்? இடையறாது நான்-நான் எனச் சுடரும் அகண்ட போத சாகரத்தின் ஒரு சிறு குமிழியே, அகங்கார வடிவனாம் ஜீவன். குமிழியும் நீரே. நீருக்கன்னியமாய் அதற்கோர் இருப்புமில்லை. அது உடையுங்கால் கடலுடன் ஒன்றாகிறது, இருக்குங்காலும் அது கடல் நீர் மயமே. சர்வ சாதாரணமான இவ் வுண்மையை உணராது, கணக்கற்ற பற்பல வழிகளிலும் அவற்றின் சிக்கல்களிலும் கருத்தைச் செலுத்திக் குழப்பமுறுகின்றனர் பெரும் பாலோரும். எத்தனை மதங்கள், சித்தாந்தங்கள், கொள்கைகள்? அப்பப்பா! இவை யாவும் முடிவில் எதற்காக தனது உண்மையை உணர்வதற்கே இத்தனை சாதனைகளும் துணைகளும் வேண்டியிருக்கின்றன.

*(வச - 1 -121)*

கே - சிலகால், தியானிக்கும் போது உணர்வு, உடலினும் வேறாய்ப் பிரிக்கப்பட்டாற் போலத் தோன்றுகிறது. இவ்வுணர்ச்சியால் எதிர் பாராததோர், அச்சம் மேலோங்கி தியானம் கலைந்து விடுகிறதே?

*ஸ்ரீ பகவான் - பயப்படுகிறவன் யார்? எல்லாம் தேகத்தையே தானாகக் கருதும் பிரமையின் விளைவே. தேகமற்று இருப்பதே நம் சுபாவ நிலை. முதலில், அதைக் கண்டு பிரமிக்கிறோம், பயப்படுகிறோம். பழகப் பழக அதுவே நம் இயற்கை நிலையென உணர்ந்து அபயபதத்தமர்வோம்.*

*(வச - 1-230)*

*ஸ்ரீ பகவான் - தூக்கத்திலுள்ளது அத்வைத நிலையே. ஜீவாத்ம, பரமாத்ம பேதம் ஏதாவது அங்கே தோன்றுகிறதா? பேதமனைத்தையும் மறந்த நிலையே தூக்கம். அதுவே சுக நிலை. அவ்வானந்த நிலையில் அமர்வதற்காக மெத்தை, தலையணை, கொசுவலை முதலியவற்றை எவ்வளவு கருத்துடன் ஒழுங்குபடுத்திக் கொள்கிறோம்! இவ்வளவும் விழிப்பு நிலைமையின் கவலைகளினின்று விடுபடு வதற்காகவே. ஆயினும் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டால், புறத் துணைகள் பயனற்றுப் போகின்றன. இதனால் விளங்குவதென்ன? அறிவெனப்படும் அறியாமையினின்று விடுபடுவதற்கே முயற்சிகள் அனைத்தும், பிறகு அவற்றால் ஆக வேண்டியது ஒன்றும் இல்லை என்பதே.*

*(வச - 1 -222) நானென்று ஒன்று கிளம்பிய பிறகே மரண பயம் தோன்றக் கூடும். யாருடைய மரணத்தைப் பற்றி யார் பயப்படுகிறான்? ஆத்மாவையும் உடலையும் ஒன்றாய்ப் பிணைப்பதாலேயே மரண பயம் உண்டாகிறது.*

# சுவர்மறை சோலை

***ஜா. ஜயராமன்***

*பண்டித படையின் ஏனோ தானோ*
*பிதற்றும் பேச்சை விடுவாய்!*
*உரமாய்க் கொள்வாய் மோனம்*

*உழைக்கப் பிறந்தாய்! எல்லா*
*உடையின் ஊடு-நெசவில் ச்ரத்தை*
*இல்லை எனினு(ம்) உனக்கு(ம்)*

*அழைப்பு வரும்பொன் ஆடை பேண்*
*ஆயின், போயும் போயும் காதல்*
*ஏனிக் கந்தல் உடனே கொள்வாய்?*

*மாதம் அறுபது நாளும்*
*வாளா வெட்டி ஆளா இருக்கின்*
*ஏதாகிலும் செல்வம் வருமோ?*
*ஏ! தா! [1]தாதா எனினும்?*

*நட்டம் நிர்த்தம் ஆடிடினும்*
*தெரிவைத் தெரிந்தபின் - அமைதி*
*காத்திடு! மாமலை போல!*

---

[1] *தாதா - காத்து அருள்பவன்*

*சாந்தம் இல்லா போதம்? ஏதம்![2]*
*சுடர்இல்லா மெழுகு வர்த்திபோல்*

*ஒழுகின் ஒன்றாய் இரண்டும்? தேனடை!*
*மெழுகில்லா தேனோ? ச்ரேட்டம்!![3]*
*தேனில்லா மெழுகடையும்?*
*ஈனக் காட்டம்[4] தீ இரை, அன்றோ?*

*பிறப்பி றப்பும் ஊழிக் குழியாம்*
*சிறக்கும் வீ ட்டைச்சேர்வாய்*
*கானல் காட்சி குப்பைக் குவியல்*
*புனல் போல் தோன்றும் கனலே*

*சாது தொந்தம் ஒன்றாய் ஓர்வன்[5]*
*காத(ல்) உற்றோன் முப்புடி யும்மே[6]*

*நயந்தான் இலாத மூடமும் - உன்*
*அறிவின்மையுமே கரைசேர்*
*பாலத்தில் கைவிட்டு விடுமோ?*
*என்று பயந்தேன் நண்பா நானும்*

---

[2] *ஏதம் - குற்றம் குறைவு*

[3] *ச்ரேஷ்டம் - உயர்ந்தது*

[4] *ஈனக் காஷ்டம் - (தேனற்ற மெழுகென்றாலோ அது) அற்பத்தீனியாம் சுள்ளி விறகு போல*

[5] *அமைசியுற்றவன சமமாய்ப்பார்ப்பான் நொந்தம் - இரட்டைகள் - இன்ப-துன்பம், வெயில்-குளிர், இளமை-மூப்பு*

[6] *உலக பாசமுற்றவன் அலைவது, அகந்தையின் முளையாம் மூன்று (காண்பான்+காட்சி+காணும் பொருள்) கூடின முப்புடியுடன்*

*உளமும் உலகப் பொருளும் அவனே*
*அருளுபவன் நம் எல்லோர்*
*உயிரின் விதியும் அவனே*

*எடுத்துக் கொள்வா(ன்) தானே எல்லாம்*
*கொடுங்கோல் அரசனு(ம்) அல்ல*
*கொடுப்பன் எழுபது மடங்காய்!*

*திடுடிப்(பு) என்(று) ஓர் கதவை மூடின்*
*சடுதி பத்தைத் திறப்பன்*

*உனையேநீ மெச்சுவதின் மேலே*
*உனை அவன் போற்றுகிறான்!*
*எழுவாய் கற்பனை கதை விட்டு*
*விடுவாய் கீழாம் காமம்*
*தழுவிடுவாய் என்றனையே*

*நெறிவாய் நடத்திச் செல்லுவ(து) உன்றன்*
*சிறுவாய் உர(ம்) அல்ல! - மற்(று)*
*அறிவாய் வழிகாட்டலும் அவனே!*

*சாதனைப் பெருமை, வேதனை! - வாளா*
*வெற்றுக் கல்லே ரூபியும்!* [7]
*நற்குரு சானாய் சூபியும்!* [8]

---

[7] *ரூபி - சிவப்புக்கல்* (Ruby)
[8] *சூபி* (Sufi)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

*விவேகானநந்தரின் 150 அகவை ஆண்டு விழா கொண்டாடப்பட்டு வரும் இவ்வேளையில் சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகளை வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம்.*

*1. எவன் ஒருவனுக்குத் தன்னிடத்தில் நம்பிக்கை இல்லையோ அவனே நாத்திகன். புதிய மதம் தன்னம்பிக்கை இல்லாதவனைத் தான் நாத்திகன் என்று சொல்லுகிறது.*

*2. நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாகவே ஆகிவிடுவாய்.*

*3. சுதந்திரமானவனாக இரு. எவரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்காதே.*

*4. நீ வரம்பில்லா வலிமை பெற்றவன். உன்னுடைய உண்மை இயல்போடு ஒப்படும் போது, காலமும் இடமும் கூட ஒரு பொருட்டல்ல.*

*5. நீ எதையும் எல்லாவற்றையும் சாதிக்கக் கூடியவன். எல்லாம் வல்லவன் நீ.*

*6. மிகப் பெரிய உண்மை இது - வலிமைதான் வாழ்வு, பலவீனமே மரணம்.*

*7.* நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல். நீ உறுதியுடன் இருந்தால், பாம்பின் விஷம் கூடச் சக்தியற்றதாகிவிடும்.

*8.* நீ எல்லை அற்றவன், மரணமற்றவன், பிறப்பற்றவன், எல்லையற்ற ஆத்மா. ஆதலால், நீ அடிமையாக இருப்பது உனக்குப் பொருந்தாது. எழுந்திரு, விழித்துக் கொள், எழுந்து நின்று போராடு.

*9.* உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே குடி கொண்டிருக்கின்றன.

*10.* ஏன்? ஏதற்கு? என்ற ஆராய்ச்சிகளில் ஈடுபடுவது நமது வேலையன்று. மாறாக செயலில் ஈடுபட்டுச் செத்து மடிவது ஒன்று தான் நமது கடன்.

*11.* உயர்ந்த இலட்சியம் கொண்ட மனிதன் ஒருவன் ஆயிரம் தவறு செய்தால், இலட்சியம் ஒன்றும் இல்லாமல் வாழ்பவன் ஐம்பதினாயிரம் தவறுகளைச் செய்வான் என்று நான் உறுதியாகச் சொல்வேன்.

*12.* தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன், இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

*13.* எழுந்திருங்கள், விழித்துக் கொள்ளுங்கள், இனியும் தூங்க வேண்டாம். எல்லாத் தேவைகளையும், எல்லாத் துன்பங்களையும் நீக்குவதற்கான பேராற்றல் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளேயும் இருக்கிறது.

*14.* மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும்.

*15.* முதலில் கீழ்ப்படிவதற்குக் கற்றுக் கொள். பிறகு கட்டளையிடும் பதவி உனக்குத் தானாக வந்து சேரும்.

*16.* பிரம்மச்சரியத்தை உறுதியாக அனுஷ்டிக்கிற ஒரே ஒரு காரணத்தாலேயே, எல்லா விதமான கல்வி அறிவையும் மிகக் குறைவான காலத்திலேயே கற்றுத் தேர்ச்சி பெற்று விட முடியம்.

*17.* உன்னுடைய இலட்சியம் ஜடப்பொருள் என்றால், நீயும் ஜடப்பொருளாகவே ஆகிவிடுவாய். ஆன்மாவை அடைவதுதான் உன்னுடைய இலட்சியம்.

*18.* உன்னால் ஒருவருக்கும் உதவி செய்ய முடியாது. மாறாக சேவை செய்யத்தான் உன்னால் முடியும்.

*19.* மரணம் வருவது இவ்வளவு உறுதியாக இருக்கும் போது நல்ல ஒரு காரியத்திற்காக உயிரை விடுவது மேல்.

*20.* அச்சமே மரணம், அச்சத்திற்கப்பால் நீ போக வேண்டும்.

*21.* நீ தூய்மை உள்ளவனாக இருந்தால், வலிமை உள்ளவனாக இருந்தால், நீ ஒருவனே உலகத்தில் உள்ள அத்தனை பேருக்கும் சமமானவனாவாய்.

*22.* நீ உற்சாகத்துடன் இருக்கத் துவங்குவதுதான், நீ சமய வாழ்க்கை வாழ ஆரம்பிப்பதற்கான முதல் அறிகுறியாகும்.

*23.* மனிதனுக்கு மன அமைதி தருவது தான் மதத்தின் அடிப்படை இலட்சியமாகும்.

*24.* மிருக பலத்தால் அல்லாமல், ஆன்மீக பலத்தால் மட்டுமே இந்தியா எழுச்சி பெறப் போகிறது.

*25.* ஒரு இலட்சியத்திற்காக நீ உயிரை அர்ப்பணிக்க கூடியவனாக இருந்தால் தான் நீ ஒரு தலைவனாக இருக்க முடியும்.

*26.* கண்டனம் செய்யும் சொல் எதையும் சொல்ல வேண்டாம். உதடுகளை மூடிக் கொண்டு உங்கள் இதயங்களைத் திறந்து வையுங்கள்.

*27.* உங்களுடைய நரம்புக்கு முறுக்கேற்றுங்கள். நமக்குத் தேவை இரும்பைப் போன்ற தசைகளும், எஃகைப் போன்ற நரம்புகளும் தாம். சுய வலிமை பெற்ற மனிதர்களாக எழுந்து நில்லுங்கள்.

*28.* உறுதியுடன் இரு. அதற்கு மேல் தூய்மை உடையவனாகவும், முழு அளவில் சிரத்தை உள்ளவனாகவும் இரு.

*29.* வாழ்க்கை என்னும் போர்க்களத்தில் அஞ்சாது எதிர்த்து நிற்கும் வீரன் ஒருவனுடைய மனநிலையே நமக்கு இப்போது தேவை.

*30.* அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்றுங்கள். ஏனென்றால் அறிவாற்றல் எப்போதும் செல்லவே முடியாத மிகவும் உயர்ந்த மனநிலைக்கு, இதயம் ஒருவனை அழைத்துக் கொண்டு போகிறது.

*31.* உணர்ச்சி வசப்படாதவர்களும் பற்றற்றவர்களும் இந்த உலகிற்கு மிகுந்த நன்மையைச் செய்திருக்கிறார்கள்.

*32.* உன் நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும், அதைக் குறித்து நீ கவலைப் பட வேண்டாம். இலட்சியத்தைப் பற்றிக் கொண்டு முன்னேறிக் கொண்டே இரு.

*33.* மனிதன் எந்த அளவிற்கு உயர்ந்தவனாகிறானோ, அந்த அளவிற்கு அவன் கடுமையான சோதனைகளையும் கடந்து சென்றாக வேண்டும்.

*34.* ஆன்மிக வாழ்க்கையில் நான் பேரின்பம் பெறாமற் போனால், அதற்காகப் புலனின்ப வாழ்க்கையை ஏன் நாட வேண்டும்? எனக்கு அமுதம் கிட்டாமற் போனால் அதற்காக சாக்கடையையா நாடிச் செல்வது.

*35.* இன்று உலகத்தில் காணப்படும் எல்லாவிதமான துன்பங்களுக்கும் காரணம், மனிதன் முட்டாள்தனமாகத் தன் வாழ்வின் இலட்சியம் இன்பம் என்று நினைத்து அதைத் தேடி அலைவது தான். இறுதியில் அவனுக்கு வாழ்வின் இலட்சியம் இன்பம் அல்ல, ஞானம் என்று புரிகிறது.

*36.* ஆன்மீகத்தில் மிகுந்த வலிமையும் ஆற்றலும் நிறைந்தவன், விரும்பினால் வாழ்க்கையில் மற்ற எல்லாத் துறைகளிலும் பேராற்றல் பொருந்தியவனாக விளங்க முடியும்.

*37.* ஓய்வு ஒழிவு இல்லாமல் வேலைகளைச் செய்து கொண்டே இரு. ஆனால் அந்த வேலைகளுக்குள் நீ கட்டுப்பட்டு விடாதே. அதற்குள் சிக்கிக் கொள்ளாதே என்பதே கீதையின் உபதேசமாகும்.

*38.* நாம் எஜமானனைப் போல் காரியங்கள் செய்யவேண்டும், அடிமையைப் போல் செய்யக் கூடாது. சுதந்திரத்தோடு காரியங்களைச் செய், அன்பு மயமாகக் காரியங்களைச் செய்.

*39.* சாகின்ற நிலையிலும் கூட ஒருவருக்கு அவர் யார், எப்படிப்பட்டவர் என்ற கேள்வி கூடக் கேட்காமல் உதவி செய்வது தான் கர்ம யோகம்.

## *கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2012*

| | | | | |
|---|---|---|---|---|
| *ஜனவரி 8* | *ஞாயிறு பகல் 12.42* | *9* | *திங்கள்* | *பகல் 1.03* |
| *பிப்ரவரி 7* | *செவ்வாய் காலை 4.19* | *8* | *புதன்* | *காலை 3.38* |
| *மார்ச் 7* | *புதன் மாலை 5.52* | *8* | *வியாழன்* | *மாலை 3.09* |
| *ஏப்ரல் 6* | *வியாழன் அதிகாலை 4.20* | *7* | *வெள்ளி* | *நள்ளிரவு 12.48* |

# நாம் எதையும் முழுமையாகப் பார்ப்பதில்லை

*ஜே.கிருஷ்ணமூர்த்தியின் கேள்வி-பதிலிலிருந்து*
(Urgency of change Ch-15).

*நண்பர் - பார்த்தல் என்ற பொருளில் கவனித்தல், காணுதல், புரிந்து கொள்ளல், விழிப்போடிருத்தல் போன்ற சொற்களையும் உபயோகிக்கிறீர்கள். முழுவதாகவும் தெளிவாகவும் பகுக்கப் படாமலும் பார்க்கும் பார்த்தலைக் குறிப்பதாகவே அவற்றை நீங்கள் சொல்வதாகத் தோன்றுகிறது. நம்மால் எதையாவது முழுமையாகப் பார்க்க முடியுமா? எப்பொழுதுமே ஏதாவது இரகசியமாக மறைத்து வைக்கப்பட்ட நிலையில் நீங்கள் அரைகுறையாகத் தான் பார்க்கிறீர்கள், அல்லவா? இரகசியங்கள் ஒளிந்திருப்பதால் முழுமையாகப் பார்த்தறிய முடியாத நிலையிலிருப்பதைப் பற்றி நீங்கள் விரிவாக விளக்கினால் எனக்கு உதவியாய் இருக்கும். என்னைப் பற்றி முழுவதுமாக அறிந்து கொள்ள என்னால் முடிந்தால், என் பிரச்சினைகள் அனைத்தும் ஒரு வேளை முடிவுறலாம். ஆக, பார்த்தறிதலை, காணுதல் என்று எதைச் சொல்கிறீர்கள்? தன்னை ஒருவரால் முழுவதுமாகப் பார்க்க முடியுமா ?*

*கிருஷ்ணமூர்த்தி - அரைகுறையாகத் தான் நாம் எப்பொழுதுமே விஷயங்களைப் பார்க்கிறோம். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன -ஒன்று, நமது கவனமின்மை,*

இரண்டாவது காரணம் என்னவென்றால் பார்க்கும் விஷயத்தை, பாரபட்சத்துடனும் அவ்விஷயத்தைப் பற்றிய நம் மனோரீதியான கணிப்புகளின் வழியாகவும் பார்க்கிறோம். எனவே, நாம் எதையும் எப்போதும் முழுமையாகப் பார்ப்பதில்லை. நம் எண்ணங்களுடன் தொடர்பு கொள்ளாமல், இயற்கையைப் பார்ப்பது கூட மிகவும் கடினமானதே. ஒரு மலரை, அதனைப் பற்றிய கணிப்பு எதையும் கொண்டிராமல், தாவரவியல் விளக்கம் எதையும் கூறாமல், மலரை மலராகப் பார்ப்பது என்பது மிகவும் கடினமாய் இருக்கிறது. கடந்த காலம், சேகரிக்கப் பட்ட அனுபவங்கள் மற்றும் விஷய ஞானம் ஆகியவற்றால் நம்மைப் பற்றி நாம் கொண்டுள்ள கணிப்பை ஒதுக்கிவிட்டு, நம்மை நாம் பார்ப்பது என்பது மிகவும் அபூர்வமாக நிகழ்கிறது. நம்மைப் பற்றிய கணிப்பு, கருத்துரு, நமக்கு இருக்கிறது. நாம் ‘இத்தகையவர்’, ‘அப்படிப்பட்டவர் அல்ல’ என்ற முறையில் நம்மைப் பற்றி எண்ணி கொள்கிறோம் - நம்மைப் பற்றி ஒரு கருத்தை நிறுவிக் கொள்கிறோம் - அக்கருத்தின் வழியாக, நம்மைப் பார்க்கிறோம். கண்களாலும் புலன்களாலும் மட்டுமல்லாமல், நம் மனதினாலும் பார்க்கிறோம். நம் மனமோ மிகவும் தளைப்பட்டிருக்கிறது. ஆக, அறிவுபூர்வமானப் ‘பார்த்தல்’ என்பது முழுமையற்ற பார்த்தலாகும். இருந்தாலும், அறிவுபூர்வமாகப் பார்ப்பது பெரும்பாலோருக்குத் திருப்தி அளிப்பதாக உள்ளது. அவ்வாறு பார்த்து, நாம் அறிந்து கொண்டுவிட்டதாக எண்ணுகிறோம். உலகம் முழுவதும் இப்படிப்பட்ட பகுக்கப்பட்ட புரிதல்தான் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. முரண்பட்ட கருத்துகளும் தீர்ப்புகளும் கொண்ட போர்க்களமாகவும் நாம் இருக்கிறோம்.

நண்பர் - ஆனால், நான் எப்படி முழுமையாகப் பார்ப்பது?

கிருஷ்ணமூர்த்தி - ஒரு பிரச்சினையை முழுவதுமாகப் புரிந்து கொண்டீர்களேயானால், பிறகு, அனைத்து பிரச்சினைகளையும் உங்களால் புரிந்து கொள்ள முடியும், காரணம், மனிதனின் பிரச்சினைகள் யாவும் ஒன்றோடொன்று தொடர்பு உடையன. பிரச்சினையை அது நிகழ்ந்து கொண்டிருக்கும் போது பார்க்க வேண்டும். நிகழ்விற்கு முன்போ அல்லது பின்போ, அதன் நினைவாகவோ அல்லது அதை உதாரணமாக எடுத்துக் கொண்டோ பார்ப்பதில் பலனில்லை. பார்த்தறிதல் என்பது உடனடியாக நிகழ்வது, நீங்கள் ஒன்றைப் பார்த்து அதைப் பற்றி உடனே அறிந்துக் கொள்கிறீர்கள். அப்படி நிகழாவிட்டால் நீங்கள் அதைப் பற்றி அறிந்து கொள்ளப் போவதே இல்லை, பார்த்தல், கேட்டல், புரிந்து கொள்ளுதல் ஆகியவை உடனடியாக நிகழ்பவை. கவனமாய்க் கேட்பதும் பார்ப்பதும் கால அளவைக் கொண்டுள்ளவை.

நண்பர் - என் பிரச்சினை தொடருகிறது. பொறாமைக்கோ அல்லது வேறெந்தப் பிரச்சினைக்கோ பழக்கங்களுக்கோ அவை தொடருவதற்கு அவகாசம் தருவது எது?

கிருஷ்ணமூர்த்தி - இயல்பாக எழுந்த விழிப்புணர்வு, நுண்ணறிவு ஆகியவற்றோடு நீங்கள் அவற்றைப் பார்க்காததால் அல்லவா அவை தொடருகின்றன? அவைகளிலிருந்து விடுபட்டு விட வேண்டும் என்ற தேவையும் கால அவகாசத்தை அனுமதிக்கிறது. ஒன்றைச் சமாளிக்க ஆற்றல் இல்லாத போது, அந்த ஒன்று பிரச்சினையாகித் தொடருகிறது. ஆற்றலின்மை, பிரச்சினைக்கு உயிரூட்டுகிறது.

நண்பர் - திரும்பப் பிரச்சினை வராமல் இருக்கும் விதத்தில், பிரச்சினையை எப்படி புரிந்து கொள்வது?

கிருஷ்ணமூர்த்தி - பிரச்சினை, அது திரும்ப வராமல் இருப்பதிலா அல்லது அதை புரிந்துக் கொள்வதிலா எதற்கு

அழுத்தம் கொடுத்து முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்? பிரச்சினை திரும்ப வரக்கூடாது என்பதற்கு முக்கியத்துவம் அளித்தீர்களேயானால், பிரச்சினையிலிருந்து நிரந்தரமாகத் தப்பித்துக் கொண்டுவிட வேண்டும் என்று நீங்கள் விரும்புவதாகப் பொருள்படுகிறது. இப்படி விரும்புவது மேலும் ஒரு பிரச்சினையைத் தோற்றுவிக்கிறது. ஆகவே, நம்மால் கேட்கப்பட வேண்டிய கேள்வி ஒன்றே ஒன்றுதான் -பிரச்சினையிலிருந்து விடுபடச் செய்யும் விதத்தில், அப்பிரச்சினையை முழுமையாகப் பார்ப்பது எப்படி? என்பதே. அமைதியிலிருந்து மட்டும் தான் பார்த்தறிதல் கைகூடும், தொணதொணக்கும் இரைச்சல் மிக்க மனதினால் பார்த்தறிய முடியாது. பிரச்சினையிலிருந்து விடுபட வேண்டும் என்ற விருப்பமாகவோ, பிரச்சி னையைக் குறைக்கப் பார்க்கும் முயற்சியாகவோ, அதிலிருந்து தப்பித்தலாகவோ, அதை அடக்குவதாகவோ, அதற்கான மாற்று ஒன்றைக் கண்டுபிடிப்பதாகவோ மனதில் இரைச்சல் இருக்கக்கூடும். ஆனால், அமைதியான மனம் மட்டும்தான் பிரச்சினையைப் பார்க்கிறது.

நண்பர் - அமைதியான மனதை நான் கொண்டிருப்பது எப்படி?

கிருஷ்ணமூர்த்தி - அமைதியான மனதை எவ்வாறு பெறுவது என்ற கேள்விக்கே இடமில்லை. மனம் அமைதியாக இருக்க வேண்டும் என்பதிலிருக்கும் உண்மையைப் பார்ப்பது, மனதைத் தொண தொணப்பிலிருந்து விடுவிக்கும். அப்படி விடுபட்ட நிலையில் மெய்யுணர்வாக இருக்கும் பார்த்தறிதல் செயல்படுகிறதே தவிர, நாம் அமைதியாய் இருக்க வேண்டும் என்ற கருத்து செயல்படவில்லை. நம் கருத்தின் செயலாக்கமானது முழுமையற்றதாகவும், சிதைந்தும் இருக்கும். முழுமையற்றதற்கும், முழுமையானதற்கும் இடையே தொடர்பு ஏதும் இல்லை. முழுமையற்றது

முழுமையானதாக பரிணமிக்க முடியாது. ஆகவே பார்த்தறிதல் என்பது மிக முக்கியமானது. பார்த்தறிதல் என்பது கவனம், கவனமின்மையே பிரச்சினையைத் தோற்றுவிக்கிறது.

நண்பர் - எந்நேரமும் கவனத்துடனிருக்க என்னால் எப்படி முடியும் அது முடியாத காரியம்?

கிருஷ்ணமூர்த்தி - சரியாகச் சொன்னீர்கள், அது முடியாத காரியம்தான். ஆனால், உங்கள் கவனமின்மையைப் பற்றிய விழிப்புணர்வு உங்களிடம் இருக்க வேண்டயது மிகவும் முக்கியமானதாகும். சதா கவனத்துடன் எப்படி இருப்பது என்பது முக்கியமல்ல - அது பேராசை கேட்கும் கேள்வியாக உள்ளது. கவனமாய் இருப்பதற்காகச் செய்யப்படும் பயிற்சிகளில் ஒருவர் தன்னை இழந்து விடுகிறார். அழகாக இருப்பதற்கும் அன்பு செய்வதற்கும் நீங்கள் பயிற்சிகள் மேற்கொள்ள முடியாது. வெறுப்பு இல்லாதொழியும் போது, 'மற்றது' இருக்கிறது. உங்கள் முழுமையான கவனத்தை வெறுப்பின் மீது செலுத்தினால் மட்டுமே, வெறுப்பு மறைகிறது. வெறுப்பைப் பற்றிய விஷய ஞானத்தைச் சேகரிக்காமல், வெறுப்பைப் புரிந்து கொள்ள வேண்டும். எளிமையாகத் தொடங்குங்கள்.

நண்பர் - நாங்கள் செய்வதற்கென்று பயிற்சி ஏதும் உங்கள் உரையிலிருந்து கிட்டவில்லை என்றால், நீங்கள் பேசுவதில் அர்த்தம் என்ன?

கிருஷ்ணமூர்த்தி - கேட்பது தான் மிகவும் இன்றிமையாதது. கேட்ட பிறகு, எதைப் பயிற்சி செய்கிறீர்கள் என்பது முக்கியமல்ல. உடனடி செயல்பாடாக அமைவது கேட்டல். பிரச்சனைகளுக்கு கால அவகாச த்தைத் தருவது பயிற்சிகள். பயிற்சி மேற்கொள்ளாதீர்கள். தவறுகளை மட்டுமே உங்களால் பயிற்சி செய்ய முடியும். எப்பொழுதுமே புத்தம் புதிதாக மலர்வது கற்றல்.

(நன்றி - வஸந்த இதழ்)

# தேர்கலை எல்லாம் தேறினும் சிந்தை தெளியாது...

*ஸ்ரீ ரமண மகரிஷிகள் திருவாதிரை நாளன்று நள்ளிரவில் மார்கழி மாத புனர்வசு நக்ஷத்திரத்தில் திருச்சுழியில் அவதரித்தார். அவரைச் சார்ந்து ரமணானுபூதி அடைந்த பசு, மான் போன்ற ஜீவராசிகளும் மற்றும் பல அணுக்கத் தொண்டர்களும் ஆவர். அவர்கள் அவ்வாறு பெற்ற பேரின்பத்தை வருங்காலத்திற்கு காலத்தால் அழியாத கவிதையாக வடித்துக் கொடுத்தவர் திரு. முருகனார் அவர்கள். அவர் பகவானின் மார்கழி மாத புனர்வசு நன்னாள் எவ்வாறெல்லாம் சிறப்பு பெறுகிறது என்பதை உணர்வுபூர்வமாக தனது ஸ்ரீரமண சந்நிதிமுறையில் யாத்ததே புனர்வசு வண்ணம் என்னும் பாக்கள்.*

*உலகில் தேர்ச்சி பெறத்தக்க கலைகள் எவ்வெத்தனை உளவோ அவ்வத்தனையும் கற்றுத் தேர்ந்தாலும் சிந்தை தெளியாது என்பதை* ***தேர்கலை எல்லாம் தேறினும் சிந்தை தெளியாது... என்றும்*** *ரமண பகவானைச் சார்வதே கதி வழி காண்பிக்கும் என்று அனுபவரீதியாகக் கூறுகிறார். பகவானை மட்டுமல்லாது அவரது பக்தர்களையும் இப்பாடல் வரிகளில் சிறப்பிக்கிறார். அணில், ராமருக்கு ஆற்றிய சிறு தொண்டினைப் போன்று* ***எதாகிலும் ஓர் குற்றேவல் இயற்றப் பெருமோஎன்று அதே நினைவாவர் புனர்வசு நன்னாள் அதுவண்ணம்...*** *என்பதாக ரமண அன்பர்கள் புனர்வசு நன்னாளன்று ஏதாவது ஒரு சிறிய அளவிளேனும் தொண்டாற்ற இயலுமா என்று ஏங்கித் தவிக்கும் நிலைப்பாட்டை சிறப்பிக்கிறார்.*

*மிகச் சிறந்த பாக்களாகிய இப்புனர்வசு வண்ணத்தை ஒவ்வொரு புனர்வசு நன்னாளிலும் பக்தர்கள் பாடிப் பரவுவது மிக நல்லது.*

*ரமணானுபூதி பெற்று பாடப்பெற்ற இவ்வரிகளின் உட்பொருள் மொழிக்கு எட்டாதது. உணரப்பட வேண்டிய உள்ளர்த்தங்கள் அனைத்தும் உணர்த்தப்படுவது என்பது இயலாதெனினும் ஓரளவாவது இதன் பொருள் அறியப்பட வேண்டி இப்புனர்வசு வண்ணம் இங்கு அளிக்கப்படுகிறது.*

# புனர்வசு வண்ணம்

*(ஸ்ரீ பகவானின் ஜென்ம நக்ஷத்திர தினத்தின் வைபவங்களைக் கூறல்)*

***(கலிநிலைத் துறை)***

*பண் : குறிஞ்சி (சுருட்டி)*

*முத்து விதானம் - என்னும் தேவாரப் பண்*

***கண்ணால் உனது கதிர்முக(ம்) நாங்கள் காணப்பெற்று***
***அண்ணால் கண்ணால்ஆம் பயன் ஆர்ந்தனம் என்பாரால்***
***எண்ணா நின்றூர் இதயத்து ஒளிரும் ரமணப்பேர்***
***அண்ணா மலையான் புனர்வசு நன்னாள் அது வண்ணம். 1***

*''உம்முடைய ஒளிவீசும் கதிர்முக தரிசனம் காணப் பெற்றதால், கண்பெற்ற பயனை நாங்கள் அடைந்தோம்'' என்று பகவானது தரிசன பாக்கியம் பெற்றவர்கள் மகிழ்ந்து கொண்டாடுவர். அத்தகைய அடியர்களது இதயத்தில் ஒளிரும் அண்ணாமலையானாகிய ரமண பகவானின் ஜயந்தித் திருநாளாகிய புனர்வசு நன்னாளின் சிறப்பு சொல்லும் தரமன்று.*

***இதாஒரு கோடியினர் போல் ஒளிரும் ரமணப்பேர்***
***உதார குணாளன் உவப்பது நோக்கி உவப்பாரால்***
***சுதா வடிவான சொரூபானந்த சுயம்ஜோதி***
***அதாவெமை ஆண்டான் புனர்வசு நன்னாள் அதுவண்ணம். 2***

*கோடி சூரியப் பிரகாசத்தோடு சிறப்புறும் பகவான், தன்னிலே தான் ரமிப்பாராக இருப்பது கண்டு, அடியார்கள் தாமும் மகிழ்வுறுவர். ஆத்ம சொரூபானந்த சுயம் ஜோதியே மாபெரும் அம்ருதக் கடலாகப் பிரகாசிக்கும் பகவான், ஆத்ம வஸ்துவாகுமாறு எனக்கும் அருள்பாலித்து ஆட் கொண்டார். அத்தகைய பகவான் அவதரித்த சிறப்பு வாய்ந்தது புனர்வசுத் திருநாள் ஆகும்.*

***குலவும் தொண்டர் கூடித் தம்மிற் கொண்டாடும்***
***தலைவன் பேச்சே தம் உணவாகத் தழைப்பாரால்***

***இலகும் புகழால் எண் திசை போர்த்த ரமணன்பேச்சு***
***அலகில் களிப்பாம் புனர்வசு நன்னாள் அதுவண்ணம். 3***

தம் சத்குருவாம் பகவானது பெருமைகளைப் பேசி, பாடி மகிழ்வதையே தம் உணவாகக் கொண்டு அடியர் உவப்பர். எட்டு திசைகளையும் தம் புகழால் நிறைவித்துவிடும் பகவானது பெருமைகள் அடியர்க்கு அளவில்லா ஆனந்தமேயாகும். ஆனந்தத்திற்குக் காரணமான பகவானது ஜயந்தித் திருநாள் புனர்வசு நன்னாள் ஆகும்.

***பொருளின் வண்ணம் புகழின் வண்ணம் பொலிவண்ணம்***
***தெருளின் வண்ணம் திருவின் வண்ணம் திகழ்வண்ணம்***
***இருளின் வண்ணம் இலையாம் வண்ணம் ரமணன்கூர்***
***அருளின் வண்ணம் புனர்வசு நன்னாள் அதுவண்ணம். 4***

பொருள், புகழ் ஆகியவை ஒளிர்ந்து பொலியும்! ஆத்மஞான அறிவின் தெளிவும், தெய்வீகமும் திகழும்! அஞ்ஞான இருள் சிறிதுமின்றி மறையும்! இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த நன்னாள் ஸ்ரீபகவானின் ஜயந்தித் திருநாளாகிய புனர்வசு நன்னாள் ஆகும்.

***மீட்சியின் வண்ணம் விஞ்சையின் வண்ணம் வீட்டின்பக்***
***காட்சியின் வண்ணம் கேள்வியின் வண்ணம் கடவுள்மாப்***
***பூட்சியின் வண்ணம் பூரண வண்ணம் பொற்றுளுக்கு***
***ஆட்சியின் வண்ணம் புனர்வசு நன்னாள் அதுவண்ணம்.5***

அகந்தைக் கட்டிலிருந்து விடுதலை, ஆத்ம வித்தை, ஆத்ம வீட்டின்பக் காட்சி, ஆத்ம அறிவு, கல்வி, இறைவனொடு ஒன்று கலக்கும் பூரண அழகு, இறைவனுடைய பொற்றாள்களுக்குப் பூரண சரணாகதி ஆகியவை முழுமையாகச் செறிந்து விளங்கும் நன்னாள் புனர்வசுத் திருநாள் ஆகும்.

***தேர்கலை எல்லாம் தேறினும் சிந்தை தெளியாது***
***நீர்கன ஞான நிலைபெற வேட்ட நெஞ்சத்தீர்***
***சார்கதி காட்டும் சதாசிவ மூர்த்தி ஜயந்திச்சீர்***
***மார்கழி மாதப் புனர்வசு நன்னாள் அதுவண்ணம். 6***

ஆயகலைகள் அறுபத்து நான்கையும் கற்றுத் தேர்ந்தாலும், சிந்தை தெளியாத காரணத்தால், இறுதியில் ஆத்மக்கலையைக் கற்று, ஆத்ம ஞான நிலையைப் பெற விரும்பும் மெய்யடியவர்களே! நீங்கள் விரும்பும் இறுதி சிவசாயுஜ்ய முக்தி நிலையைக் காட்டிக் கொடுக்கும் திருநாள் சிவபெருமானேயாகிய பகவான் ரமணரது ஜயந்தித் திருநாளாம் புனர்வசு நன்னாளேயாகும்.

***ஆதர(ம்) மிக்க அடியர் அகக்கார் அகன்றேட***
***மூதுரையாலே முகவுரை ஓதி மோனம் சேர்***
***போதனையால் அநுபூதி புணர்க்கும் புலவோன் ஞான***
***ஆதவ மெய்யன் புனர்வசு நன்னாள் அதுவண்ணம். 7***

பக்தியும் முமுக்ஷுத்வமும் கொண்ட அடியார்களின் அகஇருள் அகலும் பொருட்டு அனுக்கிரகிப்பவர். அதற்காக வேத வேதாந்தங்களை தனது மௌன உபதேச த்திற்கு, முகவுரையாகப் பயன்படுத்தும் பெரும்புலவர் ரமண பகவான். மேலும் மோனமாகிய போதனையால் ஆத்மானுபூதியை அடியார்களது இதயத்தில் விளை விக்கும் ஞான சூரிய, சத்திய சொரூபன். அத்தகைய பகவானது ஜயந்தித் திருநாள் சிறப்பு மிக்க புனர்வசு நன்னாள் ஆகும்.

***விதானம் கட்டித் தொங்கல் விட்டு விநோதம்சேர்***
***பதாகை தூக்கிப் பற்பல் சிறப்புப் பாரிப்பார்***
***எதாகிலும் ஓர் குற்றேவல் இயற்றப் பெறுமோஎன்று***
***அதே நினைவாவர் புனர்வசு நன்னாள் அதுவண்ணம். 8***

பல அடியார்கள் ரமண பகவானது ஜயந்தி நாளன்று அவரது சந்நிதானத்தை பல விதங்களில் அலங்காரம் செய்வர். மற்றும்பல அடியார்கள் பகவானது புனர்வசு நன்னாளில் ஏதாகினும் ஓர் குற்றேவலாவது கிடைக்கும் பாக்கியம் பெற மாட்டோமா என ஏக்க நினைவுடன் காத்திருப்பர். இத்தகைய பெருமை வாய்ந்தது ரமணரது புனர்வசு நன்னாள்.

***மாதவர் வேதியர் மந்திரம் ஓதி வழுத்துவார்***
***கோதையர் தாம்தம் கொழுந ரொடும் பின்குறுகுவார்***

***பேதைய ரானோர் மேதைய ராகப் பிறங்குவார்***
***ஆதர(ம்) நாம் செய் புனர்வசு நன்னாள் அதுவண்ணம். 9***

*மாபெரும் தவசிகள், வேதமோதும் அந்தணர் ஆகியோர் மந்திரங்கள் ஓதிப் போற்றுவர். பெண்மணிகள் தத்தம் கணவர்மார்களொடும் பங்கேற்பர். ஏதுமறியா பேதையர்களும் அறிவார்ந்த மேதைகளாகப் பிரகாசிப்பர். இத்தகைய சிறப்புமிக்க நன்னாள் நாங்கள் அன்புடன் கொண்டாடும் புனர்வசு தினம் ஆகும்.*

***தாழிசை வண்ணம் சந்த விருத்தம் சாற்றுவார்***
***ஏழிசை வாணர் யாழொடு வீணையில் ஏற்றுவார்***
***தோழந் தோகையர் பூப்பலி பொற்சுணம் தூவுவார்***
***வாழி ரமணன் புனர்வசு நன்னாள் அதுவண்ணம். 10***

*பன்மொழிப் புலவர்கள் பற்பல சந்த விருத்தங்களில் ஸ்ரீரமண தோத்திரப் பாமலைகளை புனர்வசு நன்னாளில் பகவானுக்கு அணிவிப்பர்.யாழ், வீணை முதலான ஏழ்வகைக் இசைகருவி வல்லுனர்கள் பகவான் புகழ் இசைப்பர். பற்பல வண்ண மலர்களாலும், பூமியைப் பல வண்ணக் கோலங்களாலும் அலங்கரிப்பர். இத்தகு சிறப்பு வாய்ந்த ரமணரும் அவரது ஜன்ம நக்ஷத்திரமான புனர்வசு வும் வாழ்க.*

**வாழ்த்து**

***மோகம் ஒழிக்கும் முனிவன் திருவாய் மொழிவாழி***
***சோகம் அகற்றும் சுத்தாத் துவிதச் சுடர்வாழி***
***ஏக சொரூப ரமணன் கருணை இயல் வாழி***
***காகம் உறவு கலந்தால் போலும் கணம்வாழி. 11***

*மோக அகந்தையை அழிக்கும் பகவானது உபதேசங்கள் வாழ்க! அகந்தைத் துயரைக் களையும் சுத்த அத்துவிதச் சுடராம் பகவான் வாழ்க! ஏகாத்ம சொரூபராம் ரமண பிரானின் கருணை இயல்பு வாழ்க! காக்கைகள் கூட்டம் போன்று மனதால் ஒன்றுபட்டு வாழும் அடியார் திருக்கூட்டம் வாழ்க!*

# ரமணானுபவம்

## நரசிம்மய்யர்

*சென்ற இதழ் தொடர்ச்சி*

*ஆச்ரமத்தில் நடக்கும் நவராத்திரி உற்சவத்தைக் காணக் கண்கோடி வேண்டும். அம்மனின் அலங்காரம் நாளுக்கொரு விதமாக இருக்கும். அம்மனுடைய விக்கிரகம் அமைந்தபின் டவுனில் ஓவிய ஆசிரியராகப் பணிபுரிந்த நாராயணசாமி ஐயர் என்பவர் தினம் விதவிதமாக அம்மனுக்கு அலங்காரம் செய்வார். 1928ஆம் வருடத்திலேயே நவராத்திரியில் லட்சார்ச்சனை ஆரம்பித்திருக்கலாம். பகவான் நவராத்திரி சமயம் இரவு உணவு கழிந்தபின் வெளியில் போய்விட்டுத் திரும்பும்போது சுமார் 8 மணிக்குக் கோயிலுக்கு வந்து அம்மனின் அலங்காரத்தைப் பார்த்து விட்டுச் செல்வார்.*

*பகவான் காபி சாப்பிடும்பொழுது சர்க்கரைக்குப் பதிலாகத் தேன் கலந்து சாப்பிடுவதுண்டு. ஒருசமயம் தனக்குக் கொடுத்த காபி மற்றவர்களுடையதைவிடச் சிறிது வேறுபட்டதாக இருந்ததைக் கண்ட பகவான் அதைப் பற்றிக் கேட்க, சாந்தம்மாள் தனக்காகத் தனிப்பட்ட முறையில் காபி தயாரித்ததை அறிந்து அன்றுடன் காபி அருந்துவதை அறவே விட்டுவிட்டார். பக்தர்கள் எவ்வளவு கெஞ்சியும் மீண்டும் காபியை அருந்தவே இல்லை. இப்படியேதான் தாம்பூலத்தையும் பிறகு சமையலறைக்குச் செல்வதையும் விட்டு விட்டார்.*

ஒரு தொழு நோயாளி தினமும் ஹாலுக்கு வந்து பகவானைத் தரிசனம் செய்து விட்டுப் போவார். அவரின் உடல் முழுவதும் தோல் வெடித்து ஆங்காங்கே இரத்தமும் சீழும் வரும். அவரைக் காண ஹாலில் மற்ற அன்பர்களுக்கு அருவருப்பாய் இருக்கும். ஒருநாள் அவரிடம் பகவான், நீ போய் மலையைச் சுற்று இங்கே வராதே! என்றார். அதை வேதவாக்காகக் கொண்டு அந்த நோயாளி கிரிவலம் சென்றபொழுது பஞ்சமுகத்தை அடைந்தவுடன் அவர் உடல் முழுவதும் வியர்த்தது. என்ன ஆச்சரியம்! அவர் பூரண குணமடைந்து விட்டார். பிறகு பகவானிடம் வந்து நமஸ்கரித்துச் சென்றார்.

1950ஆம் வருடம் ஏப்ரல் 14ஆம் தேதி மாலையில் நானும் குஞ்சு சுவாமிகளும் மற்றவர்களும் அம்மா கோயில் கிழக்குப்புற தாழ்வாரத்தில் நின்றுகொண்டு பகவானுக்குப் பிடித்தமான அருணாசல அக்ஷரமணமாலையைப் பாடிக் கொண்டிருந்தோம். அப்பொழுது பூமண மாமன பூரண மனங்கொள என்ற வரிகளைப் பாடும்பொழுது பகவான் அறையிலிருந்து ஒரு நீலநிற ஒளி புறப்பட்டு மெதுவாக ஆகாயத்தில் கிளம்பி மலையை நோக்கிச் சென்றது. பகவான் பிரம்ம நிர்வாணத்திற்குப் பிறகு ஏதும் அசம்பாவிதம் நடக்காமல் இருக்க ஏறக்குறைய 600 காவலர்கள் தயார் நிலையில் இருந்தனர்.

பகவான் சமாதிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் ஆரம்பகாலத்தில் சின்ன சுவாமிகளும் பகவானும் சமையல் செய்த இடம். மேலும் அங்குதான் அம்மா ஆலய கட்டுமானத்தின்போது பாலாலயம் செய்து பத்தாண்டுகள் பூஜை நடைபெற்றது.

பகவானுடைய சமாதிக்குப் பிறகு சிறிது காலம் நான் ஆச்ரமத்தை விட்டு திருவண்ணாமலைக்கு வெகுதூரத்தில் மாற்றலாகிச் சென்று விட்டதால் பல வருடங்கள்

ஆச்ரமத்திற்கு அடிக்கடி வர முடியாமல் போயிற்று. ஆயினும் பகவானுடைய அருள் என்னையும் என் குடும்பத்தையும் பாதுகாத்து வந்தது. பதினைந்து வயது சிறுவனாக பகவானைத் தரிசித்ததிலிருந்து இன்றுவரை பகவானிடம் என்னைப் பற்றியோ என் குடும்பப் பிரச்சி னைகளைப் பற்றியோ கூறியது கிடையாது. நான் கேட்காததால் உதவி அதிகமாகவும் கிரமாகவும் திடமாகவும் கிடைக்கப் பெற்று எல்லாம் செவ்வனே நடந்தேறியது.

**1975** முதல் ஆச்ரம பாடசாலை மாணவர்களுக்குப் பாடம் கற்பித்து வந்தேன். இந்தப் பணி பல வருடங்கள் தொடர்ந்தது. எட்டு வருடங்கள் பகவானுடைய நிர்வாண அறையையும் கவனித்துக் கொண்டேன். பகவானுடைய அருளால் நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் பெற்று அமைதியாக வாழ்கின்றேன். ஆச்ரமத்திற்கு முன்போல் தினமும் செல்ல முடியாவிட்டாலும் முக்கிய தினங்களில் பகவானைத் தரிசிக்கச் செல்கின்றேன்.


## *ரமணோதயம்*

Voluntary Services

| | |
|---|---|
| K. *சுரேஷ் ஜானகிராமன்* | *9444127770* |
| *ராஜேஷ்* M.S. | *9840075778* |
| *வஸந்தா ராகவன்* | *9445432335* |




# செய்திகள்

## திருவண்ணாமலை செய்திகள்
## ஸ்ரீ ரமணாச்ரமம், கார்த்திகை தீபம்

பகவான் காலத்தில் எவ்வாறு கார்த்திகை தீப தரிசனம் நடைபெறுமோ அவ்வண்ணமே இவ்வருடம் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் 8-12-2011 அன்று கார்த்திகை தீப தினத்தன்று மாலை பகவான் சந்நிதியின் முன்பாக பகவானின் உருவப்படத்தை முன்னிலைப்படுத்தி மலையைப் பார்த்தவண்ணம் அருணாசலஸ்துதி பஞ்சகம் மற்றும் ரமண சத்குரு பாராயணத்துடன் கார்த்திகை தீபோற்சவம் மாலை 6 மணிக்கு திரளான பக்தர்களிடையே சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அண்ணாமலையார் கிரிப்பிரதக்ஷிணம் (10-12-2011)

பக்தர்கள் மட்டும் அண்ணாமலையை கிரிவலம் வருவதில்லை அண்ணாமலையாரே அண்ணாமலையை ஆண்டுக்கு இரண்டுமுறை கிரிவலம் வருவதுண்டு. ஒன்று திருவூடல் உற்சவத்தின்போது மற்றொன்று தீபத் திருவிழாவின்போதாகும். அவ்வண்ணமே இவ்வருடம் 10-12-2011 அன்று அருணாசலேஸ்வரர் கிரிவலம் நடைபெற்றது.



## சென்னை, ரமண கேந்திரம் 132வது ஜயந்தி விழா

*8-1-2012 தேசிய கருத்தரங்கம் மாலை 3 மணி முதல் இரவு 7 மணிவரை நடைபெறும்.*

*3.00 மணி ரமண இசை - திருமதி தேவி ஸ்ரீராம்குமார் மற்றும் ஆர்யாம்பாள். 3.35 மணி முதல் 6 மணி வரை சிறப்புச் சொற்பொழிவாற்றுபவர்கள்:*

*சுவாமி ஆத்மஞானானந்தா, ஸ்ரீ ராமகிருஷ்ணமடம், சென்னை,*

*திரு. பி. சு. மணி, எழுத்தாளர், டாக்டர் எஸ். ராம் மோகன், ஆசிரியர், ரமணோதயம் மற்றும் இசை கவி ரமணன், ஆசிரியர், திரிசக்தி, விழாத் தொகுப்பு: திருமதி. வசந்தா ராகவன்.*

*9-1-2012 திங்கட்கிழமை ஜயந்தியன்று காலை மஹன்யாஸ ஏகாதச ருத்ராபிஷேகம் மற்றும் ரமண சஹஸ்ரநாமத்துடன் துவங்கி அக்ஷரமணமாலை பாராயணத்துடன் தீபாராதனை அன்னதானம் நடைபெறும்.*

*மாலை திருமதி. சியாமளா ராமச்சந்திரன் அவர்களது ஹரிகதைக்குப் பின்னர் இரவு 6.45 மணிக்கு ரமண மகரிஷிகள் உருவப்படம் மயிலை மாடவீதிகளில் அக்ஷரமணமாலை பாராயணத்துடன் வீதிஉலா நடைபெறும். ஏற்பாடு மயிலை ஸ்ரீகாந்த் மற்றும் அன்பர்கள்.*




## ரமணாலயம், ஸ்ரீரமணாச்ரமம், குரோம்பேட்டை

## புதிய எண் 6, பழைய எண் 85
## ராஜேந்திரபிரசாத் சாலை, நேரு நகர்,
## குரோம்பேட்டை, சென்னை - 600044

சீர்காழிப் பகுதியில் அஞ்சல் அதிகாரியாகப் பணியாற்றி வந்த திரு. எம்.கே ராமச்சந்திர ஐயர் அவர்களுக்கும் திருமதி ஜானகி அம்மையாருக்கும் இரண்டாவது மகனாகப் பிறந்தவர் திரு. நாகராஜன் அவர்கள். இவரது துணைவியார் திருமதி. ஆனந்தவல்லி அம்மாள்.

திரு. நாகராஜன் அவர்கள் தென்னக இரயில்வேயில் பணியாற்றியவர். இவர்களுக்கு திருமதி. கமலா, திருமதி. சித்ரா, திருமதி லலிதா என மூன்று மகள்களும் ஏக புத்திரனாக திரு. கோபாலன் அவர்களும் ஆவர். இக்குடும்பத்தினர் காஞ்சி மகா ஸ்வாமிகளின்பால் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள். பிற்காலத்தில் திரு. கோபாலன் அவர்கள் தங்கள் தாயாருடன்



ரமண பகவானால் ஈர்க்கப்பட்டு திருவண்ணாமலை ஸ்ரீரமணாச்ரமத்திற்கு வந்து போகலானார்கள்.

திரு. நாகராஜன் மறைவிற்குப்பின் குரோம்பேட்டை இரயில் நிலையத்திற்கு வெகு அருகிலிருந்த சுமார் மூன்று கிரௌண்ட் அளவிலான நிலத்தைத் தங்களுக்குள் பிரித்துக் கொள்ளாமல் தாயாரின் விருப்பத்திற்கிணங்க மனப்பூர்வமாக அனைவரும் சேர்ந்து தாய் திருமதி. ஆனந்தவல்லி அவர்களின் வழிகாட்டுதலுடன் திருவண்ணாமலை ஸ்ரீரமணாச்ரமத்திற்கு நன்கொடையாக அளித்தனர்.

முதலில் ரமணாலயம் என்று அன்பர்களால் சிறிய அளவில் துவக்கப்பட்ட இவ்விடத்தில் இன்று ஸ்ரீரமணாச்ரமத்தினரால் மிகச் சிறந்த அளவில் ரமணாலயம் என்னும் தியான மையம் கட்டப்பட்டுள்ளது. இங்குள்ள தியான மண்டபத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் தியானத்தில் ஈடுபட ஏதுவாக ரமணாலயம் அமைந்துள்ளது. இங்கு இலவச நூலகம் மற்றும் இலவச மருத்துவ ஆலோசனை வழங்கவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

*சென்னையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இம்மையத்திற்கு ரமண அன்பர்கள் திரளாக வந்து பயனடைந்து வருகின்றார்கள். இம்மையம் காலை 6 மணி முதல் இரவு 8 மணிவரை வாரத்தின் எல்லா நாட்களிலும் திறக்கப்படுகிறது. தினசரி இரவு 6.45 முதல் 7.30 வரை பகவானின் உபதேச நூல்கள் பாராயணமாக செய்யப்படுகிறது. புனர்வசு போன்ற சிறப்பு நாட்களும் கொண்டாடப்படுகின்றன.*

*இம்மையத்தின் திறப்பு விழா கடந்த 22-10-2011 அன்று தேசத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் திரளாக வந்திருந்த ரமண பக்தர்கள் சூழ ஸ்ரீரமணாச்ரம தலைவர் திரு. வே.சு. ரமணன் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. திருமதி. சுசீலா ரமணன் அவர்கள் இதற்காக நிலத்தை வழங்கிய திருமதி. ஆனந்தவல்லி அம்மையாரைப் பாராட்டி பகவான் பிரசாதமாக பொன்னாடை போர்த்தினார்கள்.*

*ஸ்ரீரமணாச்ரமத்திலிருந்து திரு. வே.சு. மணி, திருமதி. ரமணி மணி மற்றும் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். குரோம்பேட்டை பகுதியைச் சேர்ந்த பிரமுகர்கள் திரு. ப. தன்சிங், எம்.எல்.ஏ, திரு. நிஸார் அகமது, தலைவர், பல்லவபுரம் நகராட்சி, திரு. சந்தானம் மற்றும் இப்பகுதி நகர மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

*வேதபாராயணம், ரமண அஷ்டோத்ர பூஜை மற்றும் அக்ஷரமணமாலை பாராயத்திற்குப் பின்னர் கலந்து கொண்ட அனைவருக்கும் பிரசாதமாக அன்னம் அளிக்கப்பட்டது.*

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | .......... | 23612731 |
| ***கிழக்கு தாம்பரம்*** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| ***கூடுவாஞ்சேரி*** திரு R. மாதவன் | .......... | 9940453553 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| ***பெசன்ட் நகர், அடையார்*** திரு P. பாலசுப்பிரமணியன் | .......... | 24915881 |
| ***விருகம்பாக்கம்*** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| ***குரோம்பேட்டை, ரமணாலயம்*** | .......... | 9444261296 |
| ***கொளத்தூர்*** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| ***அண்ணாநகர்*** U.V. பானு | .......... | 26287809 |
| ***புதுச்சேரி*** M.S. சந்திரசேகரன் | .......... | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | .......... | 04522348157/2346102 |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| ***பொள்ளாச்சி*** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| ***மடம்*** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.